## எங்களிடம் உங்கள் தேவைக்கான பாடல் புத்தகங்கள் உண்டு




மிக நேர்த்தியாக அச்சிடப்பட்டு தேர்ந்த முறையில் பைண்டிங் செய்யப்பட்ட பாட்டுப் புத்தகம் வேண்டுவோர் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**550 தமிழ்ப் பாடல்கள்**
**50 ஆங்கிலப் பாடல்கள்**
**40 தமிழ், ஆங்கில குறும்பாடல்கள்**

### ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| நிச்சயமற்றவைகளும் நிச்சய... | 11 |
| பரிணாமக் கொள்கை | 17 |
| பெண்கள் பகுதி | 20 |
| சிறுவர் பகுதி | 24 |
| மனந்திரும்புதலின் அடை... | 26 |
| பக்தியுள்ள தகப்பன் | 29 |
| பிரதான கட்டளை - யாருக்கு... | 33 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு தெரியப்படுத்தவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.



12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும்.
தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.



## World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Tamilan TV
Every Saturday 7:00 - 7:30 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7:30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026





Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2021 - 2023
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023**
Published on 17/18 th of Every Month

## எங்களது இதர வெளியீடுகள்



சர்வதேச தரத்தில், தலை சிறந்த பிரசங்கிகளால் எழுதப்பட்ட **சத்தியத்தின் குரல்** என்ற நூல் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

**தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்**

### திருமறை தியானம்

நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி
தமிழன் தொலைக்காட்சியில்
சனி காலை 7.00 - 7.30 மணி

### வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638–701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor, S. Rajanayagam.




Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 34 இதழ் - 5 மே - 2021
தனிப்பிரதி ரூ.10/-



THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor / Publisher

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 34 May- 2021 Issue - 5

ஆசிரியர் உரை

# நான் உனக்குக் கேடகமாயிருக்கிறேன்

பரலோகத்தின் பரிசுத்த தேவனால் நமக்கு தானமாகக் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து தேவ வார்த்தைகளும் நம் ஆன்ம நன்மைக்காக அருளப்பட்டவைகளே. ஆயினும், இவ்வார்த்தை களை நேசித்து வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட ஒரு வசனமோ, சில வசனங்களோ அல்லது ஒரு வசனப்பகுதியோ மிகவும் பிடித்தமானதாக மாறிவிடும். அவைகளை நாம் நாடித் தேடி வாசித்து மகிழ்வோம். அப்படி எனக்குப் பிடித்தமான அநேக வசனங்களில் ஒன்று, ஞானி சாலமோனைக் கொண்டு ஆவியானவர் வெளிப்படுத்தின **ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம்** என்பது [நீதி 25:11] இவ்வசனத்தின் வார்த்தைகள் எனக்கு ரொம்பப் பிடிக்கும். அதிலும் குறிப்பாக, இதில் வரும், **ஏற்ற** என்னும் வார்த்தையை சிலாகித்து ருசிப்பேன். சீர்மிகு இவ்வார்த்தைக்கு ஏகபோக உரிமை கொண்டாடும் ஒட்டுமொத்த தகுதி சர்வவல்ல தேவனுக்கு மட்டுமே உண்டு.

அந்த தேவன் தான், விசுவாசிகளின் தகப்பன் ஆபிரகாம் வாழ்வின் ஓர் எக்கச்சக்க சூழ்நிலையில், **ஆபிராகமே, நீ பயப்படாதே, நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகாப் பெரிய பலனுமாயிருக்கிறேன்** என்றார்'' [ஆதியாகமம் 15:1]. கேடகம், என்னும் பொருள் பொதிந்த வார்த்தை வேதாகமத்தின் பக்கங்களில் ஓர் அறுபத்து மூன்று முறை இடம் பெற்றிருந்தாலும், இங்கு தான் முதன் முதலாக வருகிறது.

கேடகம் என்பது பழங்காலப் போர் முறையில் ஒரு முக்கிய மான ஆயுதம். வாளும், வேலும், வில்லும் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட போது, கேடகம் தற்காப்புக்கான ஒன்றாக இருந்துள்ளது. பொதுவாக கேடகம் என்று சொல்லும்போது அது சுமார் ஓர் அடி விட்டம் கொண்ட வட்ட வடிவிலான உலோகத் தால் செய்யப்பட்ட ஒன்று என்று நாம் நினைக்கிறோம். ஆனால், அகழ்வாராய்ச்சியாளர்கள் கூற்று வேறு விதமாக உள்ளது. ஆம், அக்காலத்து கேடகங்கள் பெரிய மரப் பலகைகளைக் கொண்டு சதுர வடிவிலும், செவ்வக வடிவிலும் அமைக்கப்பட்டு, கெட்டியான தோலால் மூடப்பட்டு, அதற்கு மேல் உலோகத் தகடுகள் பதிக்கப்பட்டிருந்ததாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள். தற்காப்புக்கு மட்டுமல்ல, தேவையானால் அவைகள் தாக்கு தலுக்கும் பயன்பட்டிருக்கின்றன. கேடகங்கள் இப்படிப் பெரியதாகவும், நுட்பமாகவும் வடிவமைக்கப்பட்டிருந் தாலும் கூட, இக்கேடகங்களோடு போருக்குச் சென்றவர்கள் யுத்த களத்தில் கையில் கேடங்கங்களைப் பிடித்தவர்களாய் மடிந்தும் போயிருந்திருக்கிறார்கள். கேடகங்கள் ஓர் யுத்த வீரனுக்குத் தேவையான பாதுகாப்பைக் கொடுக்க முடியாமலும் போயிருந் திருக்கிறது.

அன்றைக்குப் போர்க்களங்களில் என்ன நடந்ததோ அது போன்ற ஒரு சூழல் உலக சமுதாயத்தின் மத்தியில் இன்று இருந்துகொண்டுள்ளது. எப்படியெனில், கேடகம் என்னும் தமிழ் வார்த்தைக்கான ஆங்கில வார்த்தை **ஷீல்டு** ஆகும். கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக உலகெங்கும் பேசப்படும் வார்த்தைகளில் ஒன்று **கோவிஷீல்டு** என்பது. இந்த கொரானா பெருந் தொற்றிலிருந்து ஒருவனைப் பாதுகாக்கும் தடுப்பூசி என்று பேசப்படுகிறது. ஆயினும், இது முற்றிலும் உண்மையில்லை. எப்படியெனில், இரண்டு டோஸ் எடுத்துக்கொண்டவர்கள் கூட நோய்த் தொற்றுக்கு ஆளாகி மரணிக்கிறார்கள். ஆகவே, அரசாங்கங்கள் கூவிக்கூவி அழைத்தாலும் மக்களிடம் ஒருவித பயம் கலந்த தயக்கம் இருக்கவே செய்கிறது. ஆம், பாதுகாக்கும் என்று எதிர் பார்க்கப்படும் ஒன்றால் பாதுகாக்க முடியாமல் போகிறது. அது அந்தக் கால கேடகமாகிய **ஷீல்டாக**'' இருந்தாலும், இந்தக் காலத்து மருத்துவக் கண்டுபிடிப்பான **கோவிஷீல்டாக** இருந்தாலும் கள நிலவரம் இதுதான். இது எதை நமக்குச் சொல்கிறது? மனித அறிவின்படியானது எப்போதும் ஓர் எல்லைக்குட்பட்டது என்பதே. ஆனால், தேவனின் ஷீல்டு ஆகிய கேடகம் அப்படிப்பட்டதல்ல.

சரி, நான் உனக்குக் கேடகம் என்று தேவன் ஆபிரகாமுக்கு எப்பொழுது சொன்னார் என்பதைத் தெரிந்து கொள்ள நமது வழக்கத்தின் படியாக இதன் பின்னணிக் காரியங்களுக்குள்ளாகக் கடந்து வந்துவிடலாம்.

தேவ அழைப்பை ஏற்று, சொந்தம், பந்தம், ஊர், உறவு என்று எல்லாவற்றையும் விட்டு கல்தேயர் பட்டணத்திலிருந்து கானனை நோக்கிய ஆபிரகாமின் பயணத்தில் அது ஒரு சவாலான காலகட்டம். ஒரு வேளை எல்லாவற்றையும் விட்டு வந்தாலும், தன்னோடு ஒட்டி வந்த அண்ணன் மகன் லோத்துவை வெட்டிவிட மனமில்லாமல், கூட வைத்து ஆளாக்கி அழகு பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில் இரண்டு பேருடைய மந்தை மேய்ப்பர்களால் வந்த சர்ச்சையால் அவனைப் பிரிய நேரிடுகிறது [ஆதியாகமம் 13-ஆம், அதிகாரம்]. எப்பொழுதும் கண்களின் ஈர்ப்புக்கு இசைவு தெரிவிக்கும் லோத்து, ஆபிரகாமிடமிருந்து பிரிந்த போது, சோதோம் கொமொராவைத் தன் குடியிருப்புக்காகத் தெரிந்து கொண்டான். அதற்குக் காரணம் அப்பகுதி அவன் கண்களுக்குப் பச்சையாயிருந்ததே.

தொடர்ந்து அப்பகுதியில் அவன் குடியிருந்த போது, அங்கிருந்த 5 ராஜாக்களுக்கும், 4 ராஜக்களுக்கும் இடையே யுத்தம் மூண்டது. அதில் 4ராஜாக்கள் கூட்டு வெற்றி பெற்று எதிரணியின் மனிதர்களையும், பொருள்களையும் கொள்ளை யிட்டுச் சென்றனர். அப்படிப் போனவைகளில், அங்கே குடியிருந்த லோத்துவும், அவன் குடும்பமும், அவன் உடமைகளும் அடக்கம். இந்த செய்தி ஆபிரகாமுக்குக்கு வந்தது. பதறிப்போன ஆபிரகாம் தன்னிடமிருந்த கைபடித்தவர்களாகிய 318 பேரை ஆயுதம் தரித்தவர்களாய் கூட்டிப்போய், தான் மட்டும் அவர்களைப் பின் தொடர்ந்து, வியூகம் வகுத்து அவர்களை வெற்றிக்கொண்டு லோத்துவையும், அவனுக்குண்டான எல்லாவற்றையும் திருப்பிக் கொண்டு வந்தான்.

அம்மண்ணின் ராஜாக்களையே வெற்றி கண்டு, தன் அண்ணன் மகனையும், அவனுக்குண்டான எல்லாவற்றையும் மீட்டு வந்த வெற்றிக் களிப்பு அவனுக்குள்ளாக இருந்தி ருந்தாலும், அவனுடைய இருதயம் ஒருவித கிலேச நிலையில் இருந்திருப்பதாகவே தெரிகிறது. எப்படியெனில், இந்தக் காரியங்கள் நடந்த பின்பு, கர்த்தருடைய வார்த்தை ஆபிரகா முக்குத் தரிசனத்திலே உண்டாகி, அவர்: **ஆபிரகாமே, நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகாப் பெரிய பலனுமாயிருக்கிறேன்** என்றார் [ஆதியாகமம் 15:1].

இவ்வார்த்தைகளை கவனிக்கும் போது, தேவன் ஆபிரகாமிடத்தில் ஏன் இப்படிச் சொன்னார் என்ற கேள்வி வராமல் போகாது. அப்படித்தானே! தொடர்ந்து கவனிப்போம்.

சோதோம், கொமராவைச் சுற்றியிருந்த ராஜாக்கள் காரணம் இல்லாமல் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்பவர்கள் என்றும், இரத்த வாடை அவர்களுக்குப் பிடித்தமான ஒன்று என்றும் ஆபிரகாம் அறிந்திருந்தான். ஆகவே, தன்னால் தோற்கடிக்கப்பட்ட ராஜாக்கள் தனக்கெதிராக அணிதிரண்டு வந்து விடுவார்களோ என்று ஆபிரகாம் பயந்திருப்பானா? பெற்றுத்தந்த வெற்றிக்கு நன்றியாக சோதோமின் ராஜா கொடுத்த வெகு மதிகளை ஏற்க மறுத்ததால் அவனால் தீமை வரக்கூடும் என்று எண்ணியிருப்பானோ? [ஆதி. 14:21-23] அப்பகுதிக்கு தான் அந்நியனாகவும், அதே வேளையில் பெரும் செல்வந்தனாகவும் இருந்தபடியால், ஏதாவது ஒரு கட்டத்தில் தனக்கு எதிராகச் செயல்படத் திட்டமிடுவார்களோ என்று மனதுக்குள் நினைத் திருப்பானா? இப்படிக் காரணம் எதுவாக இருந்தாலும், இருதயத்து நினைவுகளை அறிகிற தேவன் ஆபிரகாமுக்காக அங்கே களம் இறங்குகிறார். ஆம், தன் தாசனாகிய ஆபிரகாம் இப்படிப் பயத்திலும், கலக்கத்திலும் நாட்களைக் கழிக்க விரும்பவில்லை.

இந்த இடத்தில்தான் தேவன் சொன்னார் ஆபிராமே, நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகம் என்று. சந்தேகமில்லாமல் இவ்வார்த்தைகள் வெள்ளித் தட்டில் வைக்கப்பட்ட பொற் பழங்களுக்குச் சமமானவைகளே.

சரி, இப்பொழுது நான் உனக்குக் கேடகம் என்று ஆபிரகாமிடம் சொன்ன தேவன் எப்படிப்பட்டவர் என்று கண்டு, அதன் மூலம் நமக்குக் கிடைக்கும் பாடங்கள் என்னவென்று பார்போம்.

## I. **கேடகமாகிய தேவன் - சர்வ வல்லமையுள்ளவர்.**

'' நான் உனக்கும் கேடகம்'' என்று சொன்ன தேவனைப் பற்றி நாம் முதலாவது தெரிந்து கொள்ள வேண்டியது, அவர் சர்வ வல்லவர் என்பது.

வல்லவன் என்னும் வார்த்தை நம் வழக்கத்தில் உண்டு. சில மனிதர் அசாதாரணத் தன்மைகளைப் பெற்றிருக்கும் போது, அதாவது வலிமை மிக்கவனாக, ஆற்றல் அதிகம் கொண்டவனாக இருக்கும் போது வல்லவன் என்று சக மனிதர்களால் அழைக்கப்படுவான். ஆனால், **சர்வவல்லவர்** என்பது எந்த மனிதனோடும் சம்பந்தப்படாத ஓர் அரிய வார்த்தை. பரலோக

தேவனுக்கு மாத்திரமே உரித்தான ஒன்று. தேவன் **சர்வவல்லவர்** என்பது அவரை நேசிப்பவர்களால் அவருக்குச் சூட்டப்பட்ட ஓர் அலங்கார வார்த்தையல்ல. மாறாக, **தேவன் தாமே தனக்காக எடுத்துக் கொண்ட நாமம் இது**. இந்த நாமத்தைத் தன்னுடையவர்களின் நன்மைக்காகவும், நம்பிக்கைக்காகவும் தேவன் வெளிப்படுத்தினார். ஆம், தம் தாசனாகிய ஆபிரகாம் தொண்ணூற்றொன்பது வயதாயிருக்கும் போது, தான் சர்வ வல்லமையுள்ள தேவன்'' என்று தரிசனத்தில் கூறினார். [ஆதியாகமம் 17:11]. தான் சர்வ வல்லவர் என்பது அவருக்குத் தெரியாததல்ல. ஆயினும், ஏன் இப்படி வெளிப்படுத்தினார்? கவனியுங்கள், அப்பொழுது ஆபிரகாம் தொண்ணூற்று ஒன்பது வயது நிரம்பிய கிழவனாகவும், அவன் மனைவியாகிய சாராள் ஸ்திரீகளுக்கான வழிபாடு நின்று போன கிழவியாகவும் இருந்த நிலையில் நான் உனக்கு ஒரு குமாரனைக் கொடுப்பேன் என்பதையும் , உன் மனைவியாகிய சாராள் அநேக ஜாதிகளுக்குத் தாயாக இருப்பாள் '' என்னும் வாக்குத்தத்தத்தை நம்ப வேண்டியதாயிருந்தது. அந்த நம்பிக்கையை இவர்கள் பெற்றுக் கொள்ளும்படியாய் 'நான் சர்வ வல்ல தேவன்'' என்று அறிவித்தார். இதன் பொருள் **எல்லாவற்றையும் செய்யும் அதிகாரம் கொண்டவர் மற்றும் அவரால் செய்யக் கூடாதது ஒன்றுமில்லை** என்பது.

அருமையானவர்களே! 'தேவனால் எல்லாம் கூடும்'' என்பது முழுக்க முழுக்க உண்மை. ஏராளமான வசனங்கள் இதற்கு ஆதாரமாக உள்ளது. ஆனால், எல்லாம் வல்ல தேவனுடைய வல்லமை யாரிடத்தில் வெளிப்படும் என்பது கவனிக்கத்தக்க ஒன்று. முதன் முதலாக நான் சர்வ வல்லமையுள்ள தேவன்' என்று வெளிப்படுத்துகிற அச்சந்தர்ப்பத்தில்தானே இப்படியாக குறிப்பிடுகிறார். **நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு** என்று [அதியாகமம் 17: 1]. ஆம், தேவ வல்லமை ஒருவனிடத்தில் வெளிப்பட உத்தமம் அவசியம். புரிகிறதா? நான் ஆபிரகாமின் தேவனைத்தான் நம்பிக் கொண்டிருக்கிறேன். ஆகவே, ஆபிரகாமுக்குக் கேடகமாயிருந்த தேவன் எனக்கும் கேடகமாயிருப்பார் என்று வெறுமனே நம்பி ஏமாந்து போகக் கூடாது! அவருடைய வல்லமையின் படியான பாதுகாப்பு, கேடகமாகிய தேவனின் பாதுகாப்பு கிடைக்க வேண்டுமெனில் உத்தமம் அவசியம். ஞானி சாலமோன் இது குறித்துக் கூறுவதைப் பாருங்கள். **உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு அவர் கேடகமாயிருக்கிறார்** [நீதிமொழிகள் 2:7]. அப்படியானால் நாம் உத்தமமாய் உள்ளோமா?

## II. **கேடகமாகிய தேவன் - எங்கும் நிறைந்தவர்.**

நான் உனக்குக் கேடகம் என்று சொன்ன தேவனைப் பற்றி நாம் இரண்டாவது தெரிந்து கொள்ள வேண்டியது, அவர் எங்கும் நிறைந்தவர் என்பது.

நம் சமுதாயத்தில் இறைவனைப் பற்றிச் சொல்லும் போது இப்படியாகச் சொல்லுவார்கள். இறைவன் தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான் என்று. எந்தளவு புரிந்து இதைச் சொன்னார்களோ எனக்குத் தெரியாது. ஆனால், இது உண்மை யிலும் உண்மை. இக்கூற்றுக்குப் பரலோக தேவன் முற்றிலும் தகுதியுடையவராக உள்ளார். இது சம்பந்தமாக எங்கும் வியாபித்துள்ள தேவன் கேட்கும் கேள்வியைப் பாருங்கள். **யாவனாகிலும் தன்னை நான் காணாதபடிக்கு மறைவிடங்களில் ஒளித்துக்கொள்ளக் கூடுமோ?** என்று (எரேமியா 23:24). இக்கேள்வியைப் புரிந்த கொண்டதாலோ என்னவோ சங்கீதக் காரன் இவ்விதமாக எழுதியுள்ளார். **உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமூகத்தை விட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்: நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது கரம் என்னைப் பிடிக்கும்** (சங்கீதம் 139:7–10) என்று. ஆக, கேடகமாகிய தேவன் எங்கும் வியாபித்திருக்கிறார்.

இன்னும் தேவனின் இத்தன்மை குறித்து ஞானி சாலமோன் கூறும்போது, கர்த்தரின் கண்கள் எவ்விடத்திலுமிருந்து, நல்லோரையும், தீயோரையும் நோக்கிப் பார்க்கிறது என்று (நீதி15:3). இப்பகுதியை ஒட்டிய இன்னொரு வசனத்தையும் கவனியுங்கள், **தம்மைப்பற்றி உத்தம் இருதயத் தோடிருக் கிறவர்களுக்குத் தம்முடைய - வல்லமையை விளங்கப்பண்ணும் படி காத்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது; ...**(II நாளாகமம் (16:9). தேவன் பற்றிய இந்த உண்மை நம்முடைய, அறிவுக்கும் புரியவில்லை., நமக்கு மட்டுமல்ல தாவீது போன்ற தேவ மனிதர்களுக்கும் புரியவில்லை. ஆகவேதான், இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும் எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது'' என்று கூறியுள்ளார் ( சங்கீதம் 139:6).

அருமையானவர்களே, கேடகமாகிய தேவன் எல்லா இடங்களிலும் இருக்கிறார். இது உண்மையாக இருக்கும் போது, அவருடைய பிள்ளைகளுக்கு எதிராக யார் காரியமாற்றிவிட

முடியும்?. அவருடைய பார்வையில் படாமல் ஒன்றைச் செய்து விட முடியுமா? முடியவே முடியாது. இதனால் தான் தேவன் யோசுவாவுக்குச் சொல்லும்போது, '' நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை'' என்றது மல்லாமல், '' நீ போகும் இடமெல்லாம் நான் உன்னோடே இருக்கிறேன்'' என்றும் வாக்களித்தார். (யோசுவா 1:5,9). தேவன் நாம் செல்லுமிடமெங்கும் வருவாரானால், அவர் கேடகமா யிருந்து நம்மைப் பாதுகாப்பது நிச்சயம். ஆனால், சிலுவைக்குப் பின்னால் வாழும் நாம் கிறிஸ்து புதிய ஏற்பாட்டில் கற்பித்த வார்த்தைகளின் படியெல்லாம் நடக்கக் கவனமாகவும், எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும். இது ஒன்று தான் தேவன் நமக்கு விதிக்கும் நிபந்தனை. இதன்படி செய்ய நாம் நம்மை ஒப்புக் கொடுப்போமானால், கேடகமாகிய தேவனின் பாதுகாப்பு நாம் எங்கிருந்தாலும் நமக்கும், நம் குடும்பத்திற்கும் நிச்சயம் கிடைக்கும்.

III. **கேடகமாகிய தேவன் - எல்லாம் அறிந்தவர்.**

நான் உனக்கு கேடகம் என்று சொன்ன தேவனைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டிய இன்னொன்று, அவர் எல்லாம் அறிந்தவர் என்பது .

நான் உனக்கு கேடகம் என்று சொன்ன தேவன் சர்வ வல்லவராக, சர்வவியாபியாக மாத்திரமல்ல எல்லாம் அறிந்தவராக இருக்கிறார். எல்லாம் அறிந்தவர் என்பது 'எல்லாரைப் பற்றியும், எல்லாவற்றைப் பற்றியும் முழுமையான, சம்பூரணமான ஆற்றல் பெற்றவர்' என்பது. பழைய, புதிய ஏற்பாட்டு வசனங்கள் தேவனின் இத்தன்மைக்குச் சான்று பகர்கின்றன. மேசியா தீர்க்கனாகிய ஏசாயா தேவனின் இத்தன்மை குறித்து இப்படியாகக் கூறியுள்ளார். '' **தமக்கு அறிவை உணர்த்தவும் தம்மை நியாய வழியிலே உபதேசிக்கவும், தமக்கு ஞானத்தைக் கற்றுக் கொடுக்கவும், தமக்கு விவேகத்தின் வழியை அறிவிக்கவும் அவர் யாரோடே ஆலோசனை பண்ணினார் என்று.**

தேவனின் இத்தன்மை குறித்து சங்கீதகாரனின் கூற்றைப் பாருங்கள். **கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து, அறிந்திருக்கிறீர்; என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர், என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர். நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர், என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியும் என் நாவில் சொல் பிறவாததற்கு முன்னே, இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர்.** (சங்கீதம் 139:1-4).

இப்படி மனிதருடைய வழிகளை நோக்கிப் பார்க்கிறவராக இருக்கிறபடியால்தான் நினிவேக்குப் போகும்படி கட்டளை பெற்ற யோனா, தர்ஷீசுக்குப் போகும்போது, அவனை நடுக்கடலில் மடக்கிப் பிடித்து, கப்பலின் அடி தட்டில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தவனை மீன் வயிற்றுக்குள் போகச் செய்து தன் வழிக்குக் கொண்டு வந்தார் (யோனா 1,2 அதிகாரம்). அதுமாத்திரமல்ல, யோசுவாவின் நாட்களில், எரிகோவை வென்றபோது கர்மீசுக்குப் பிறந்த ஆகான் தேவ வார்த்தையை மீறி **ஒருவருக்கும் தெரியாமல்** சாபத்தீடானத்தில் சிலதை எடுத்துக் கொண்டதை தேவன் கண்டு ஒட்டுமொத்த இஸ்ரவேலை தண்டித்தார் (யோசுவா 7-ம் அதிகாரம்) இன்னும் புதிய ஏற்பாட்டுக்கு வருவோமானால் அனனியா, சப்பீராளைப் பார்க்க முடியும். **யாருக்கும் தெரியாமல்** தங்கள் கிரயத்தின் ஒரு பகுதியை ஒளித்து வைத்து நாடகமாடியதை பரலோகத்தின் தேவன் அம்பலப்படுத்தித் தண்டித்தார்.

அருமையானவர்களே! தேவன் எல்லாம் அறிந்தவர் என்பது ஒருவகையில் நமக்கு நம்பிக்கையையும், பெலனையும் கொடுத்தாலும், இன்னொரு வகையில் அது நமக்கு ஒருவித பயத்தைக் கொடுக்கிறதாக உள்ளது . எப்படியெனில், நம்முடைய எண்ணங்களும், சிந்தனைகளும், போக்கும், வரத்தும் அவருக்கு அத்துப்படியாக இருக்கிறபடியால், அவரை நாம் ஒரு போதும் ஏமாற்ற முடியாது. ஆம், சரீர வாழ்வில் நாம் செய்கின்ற நன்மை, தீமை எல்லாம் கிறிஸ்துவின் நியாயசனத்திற்கு முன்பாக ஒருநாளில் வெளிப்படும் (II கொரிந்தியர் 5:10). நாம் ஒவ்வொருவரும் நம்மைக் குறித்து தேவனுக்குத் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் (ரோமர் 14:12), தப்பிக்கவே முடியாது. ஆகான் தப்பிக்காத போது, அனனியா சப்பீராள் தப்பிக்காத போது நாம் மட்டும் தப்பித்துவிட முடியுமா என்ன? முடியாது, முடியவே முடியாது.

ஆகையால், கேடகமாகிய தேவனைக் குறித்தான இவ்வுண்மைகளை நாம் முழுமையாக உள்வாங்கி ஆபிரகாம் போல தேவனுக்கு முன்பாக உத்தமனாக நடந்து, சரீர பாதுகாப்பையும், ஆன்ம பாதுகாப்பையும் பெற்று இம்மையிலும் மறுமையிலும் பெருவாழ்வு வாழ்வோமாக! ஆமென்!! ✝

# *நிச்சயமற்றவைகளுள் நிச்சயமானவை*

Dr. **ஏபில் நாயகம்**

**கி**றிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே! உங்கள் யாவருக்கும் இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள்.

கொரோனா வைரஸின் தொற்று உச்சத்தை தொட்டு அதன் இரண்டாம் அலை சற்தே சரியத் தொடங்கியுள்ளது. ஆனால், கொத்துக் கொத்தாக மரணங்கள். நீண்ட வரிசையில் நோயாளி களின் கூட்டம், மருத்துவமனையில் படுக்கை பற்றாக்குறை, ஆக்ஸிஜன் பற்றாக குறை, அணிவகுத்து நிற்கும் ஆம்புலன்ஸ் கள் என்று இரண்டாம் அலையின் கோரத்தை கடந்த மாதங்களில் நாம் கண்டோம். நம் குடும்பத்தில் ஒரு நபரோ, நம் உறவினரோ. அல்லது நம் நண்பர்களில் ஒருவரோ, யாராவது ஒருவர் தொற்றால் பாதிக்கப்படுவதும், உயிரிழப்பதும் அனுதின நிகழ்வுகளாக இருந்தது என்பது தான் உண்மை. நம்மைச் சுற்றி சம்பவிக்கிறதை நாம் காணும் போதும், கேட்கும் போதும் இதுவரை இருந்திராத ஒரு துயரமும், துக்கமும், பயமும் நம்மை சூழ்ந்துகொண்டு நம் மனதை குடையத்தான செய்தது. எனக்கும் இந்த தொற்று ஏற்படுமா? நானும் பாதிப்புக்குள்ளாவேனா? என் உற்றார் உறவினரை இது பாதிக்குமா? என்று பயமும் பயத்தின் விளைவாக குழப்பமும், மன அழுத்தமும் நம்மில் பலருக்கு நிச்சயம் ஏற்பட்டிருந்திருக்கும். இப்படி நம்மில் பலரை மன உளைச்சலுக்கு ஆளாக்கியிருக்கிறது இந்த கொரோனா என்ற வைரஸ்.

அது மாத்திரமல்ல, இந்த நோய் தொற்றுக் காலத்தில் பொதுவாக எல்லாருக்கும் நோய் சம்பந்தமான பல கேள்விகள் மனதில் தோன்றியிருக்கும். ஏன் இப்படி நடக்கிறது, இதற்கு என்ன மருத்துவ சிகிச்சை, நோய்த் தொற்று ஏற்படாமல் எப்படி என்னைப் பாதுகாத்துக்கொள்வது, எப்பொழுது இயல்பு நிலைக்கு திரும்பும் என்று பல கேள்விகள் வந்திருக்கும். இது இயல்பு தான்.

இந்தக் கேள்விகள் அனைத்து விதமான இறைநம்பிக்கை உடையவர்களாலும் கேட்கப்படும் பொதுவான கேள்விகளாக இருக்கிறது. ஆனால், கிறிஸ்தவர்களாக இருக்கும் நமக்கு சற்று வித்தியாசமான ஒரு கண்ணோட்டம் நிச்சயம் இருக்கும். அதற்கு காரணம், இது போன்ற கொள்ளை நோய்களைப் பற்றின சரித்திர நிகழ்வுகள் நமக்கு வேதாகமப் பக்கங்களில் எழுதி கொடுக்கப் பட்டிருக்கிறது. குறிப்பாக, பழைய ஏற்பாட்டில் பல சம்பவங்களை நம்மால் பார்க்க முடியும்.

உதாரணமாக, நம் குழந்தை பருவங்களிலிருந்தே நாம் கேள்விப்பட்ட ஒரு சரித்திர நிகழ்வு யாத்திராகமம் 9:3–6 வரை உள்ள வனப்பகுதியில் உள்ளது. அங்கே எகிப்தியரின் மிருக

ஜீவன்களாகிய குதிரைகளின் மேலும், ஒட்டகங்களின் மேலும், ஆடுமாடுகளின் மேலும் கொடிய கொள்ளை நோயை தேவன் வரிசையாக அனுப்பினார் என்று பார்க்கிறோம். அதன் விளைவாக எகிப்தியருடைய மிருக ஜீவன்கள் எல்லாம் செத்துப்போயிற்று என்று 6வது வசனத்தில் வாசிக்கிறோம். இப்படி வாதை, கொள்ளை நோய் என்கிற பதம் வேதாகமத்தில் குறைந்தது 12 முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது, இது போன்ற நிகழ்வுகள் பதி வாகியுள்ள சம்பவங்களை நாம் கவனித்தால் தேவன் கொள்ளை நோய்களையும், வாதைகளையும் ஒரு நோக்கத்திற்காகப் பயன்படுத்தியிருக்கிறார் என்று தெரிந்து கொள்ள முடியும்.

அடுத்ததாக, லேவியராகமம் 26:25 ல் ஜனங்களுக்குள்ளே கொள்ளை நோய்களை அனுப்புவதாக தேவன் ஏன் கூறினார் என்று கவனிப்போம். 21 ம் வசனத்தை வாசிக்கையில் நீங்கள் எனக்குச் செவிகொடுக்க மனதில்லாமல் எனக்கு எதிர்த்து நடப்பீர்களானால்....'' என்றும், வசனம் 23, 24–ல் நான் செய்யும் தண்டனையினால் நீங்கள் குணப்படாமல் எனக்கு எதிர்த்து நடந்தால், நான் உங்களுக்கு எதிர்த்து நடந்து, உங்கள் பாவங் களினிமித்தம் ஏழத்தனையாக வாதித்து கொள்ளை நோயை உங்கள் நடுவிலே அனுப்புவேன் என்றார். இந்தநிகழ்வில் **கீழ்படியாமைக்கு தண்டனையாக** தேவன் கொள்ளை நோயை அனுப்பியிருக்கிறார் என்று தெரிந்து கொள்ள முடியும்.

எனவே, இப்படிப்பட்ட வேதாகம சம்பவங்களின் பின்னணி அறிவு கொண்ட கிறிஸ்தவர்களுக்கு, கொரோனா தொற்றும் தேவனுடைய தண்டனையாக இருக்குமோ என்று நிச்சயம் எண்ணத் தோன்றும். அப்படிப்பட்ட எண்ணம் நம்மை தவறான புரிதலுக்கு உட்படுத்திவிடும். தேவன் தான் கொரோனா வியாதியை அனுப்பியிருக்கிறார் என்ற தேவறான புரிதல் நமக்கும் வந்துவிடும். ஆனால், ஒன்று நிச்சயம். தேவன் இதை ஏதோ ஒரு காரணத்திற்காக அனுமதித்திருக்கிறாரே தவிர, அவர் தான் இதற்கு காரணம் என்ற முடிவுக்கு நாம் வந்துவிட க்கூடாது. ஏனென்றால், **தேவனுடைய சகல கிரியைகளையும், மனிதன் கண்டுபிடிக்க முடியாது**. பிரயாசப்பட்டாலும் அதை அறிய முடியாது என்று பிரசங்கி 8 :15–17 வசனப்பகுதியில் வாசிக்க முடியும்.

சரி, அப்படியென்றால், இந்த கொடுந்தொற்றின் நடுவில் தேவனை எங்கு தேடுவது? அவர் எங்கே? என்னுடைய இக்கட்டான இந்த சூழ்நிலையில் நான் என்ன செய்ய வேண்டும்? எனக்கு ஏற்படுகின்ற துக்கத்தையும், கவலையையும் நான் எப்படிப் மேற்கொள்வது ? எப்படிப்பட்ட எண்ண ஓட்டம் எனக்கு வேண்டும்? என்று அடுத்த தொகுப்பாக பல கேள்விகள் நம் மனதில் எழத்தான் செய்கிறது.

பிரியமானவர்களே, கலங்க வேண்டாம். ஏசாயா 26:3 ல் '**உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிற படியால், நீர் அவனைப் பூரண சமாதான த்துடன் காத்துக்கொள்வீர்'** என்று வாசிக்கிறது போல், மெய்யான சமாதானத்தை தர தேவன் ஆயத்தமாக இருக்கிறார். கேள்வி யென்னவென்றால், அதை பெற்றுக்கொள்ள நாம் ஆயத்தமா? என்பதே. நம் கண்ணோட்டம் சரியானதாக இருக்கிறதா? நம் அணுகுமுறை தேவனுக்கு ஏற்புடையதாக இருக்கிறதா என்ற சில கேள்விகளை நமக்கு நாமே கேட்டுக்கொள்ள முதலாவது முயற்சிப் போம். ஏனென்றால், இது போன்ற, குழப்பமான தருணங்களும், நிச்சயமற்ற நேரங்களும் சூழ்நிலைகளும் நம்மை தொடர்ந்து வர வாய்ப்புள்ளது. இப்பொழுது இருக்கிற கொரோனா தொற்றி னுடைய தாக்கம் அதிகபட்சம் இன்னும் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகள் கூட இருக்கலாம். ஆனால் ஒருவேளை இது போன்ற கொள்ளை நோய்களையோ, பேரிடர்களையோ நாம் கண்டால் நாம் கொண்டிருக்கும் வேதாகமம் சார்ந்த அணுகுமுறை தான் நமக்கு உண்மையான சமாதானத்தை கொடுக்கும்.

அப்படியென்றால் இது போன்ற காலத்தை எப்படி எதிர் கொள்ள வேண்டும்? பயம் நீங்கி சமாதானம் வேண்டுமெனில், குழப்பம் நீங்கி தெளிவு வேண்டுமெனில் என்ன செய்ய வேண்டும்? தொடர்ந்து படியுங்கள்.

கிறிஸ்தவர்களாகிய நாம் நமக்கு போதிக்கப்பட்டவைகளின் மேல் கட்டப்பட்டிருக்கிறோம். அதிலே வேர்கொண்டவர் களாகவும் இருக்கிறோம். அப்படி இருக்கும் நாம் சில அடிப்படை உண்மைகளைத் தெரிந்து கொண்டு, அதை அனுதினமும் நம் சிந்தையில் வைத்திருக்க வேண்டும். இந்த அடிப்படை உண்மைகள் வாழ்க்கையின் மீது நமக்கு இருக்கும் அபிப் பிராயத்தை நிச்சயமாக மாற்றும்; நிச்சயமற்ற நேரங்களை நாம் எதிர் கொள்ளும் பொழுது, நமக்கு இது மிகவும் பிரயோஜ னமாகவும் இருக்கும்.

**1. நாம் மண்ணாய் இருக்கிறோம் , மண்ணுக்கு திரும்புவோம்.**

ஆதியாகமம் 3:19 ல் , மண்ணினாலே படைக்கப்பட்ட ஆதாமி டத்தில் தேவன் கூறின வார்த்தைகள். **நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்கு திரும்புவாய்?** அதின் அர்த்தம், **மனிதர்களாகிய** நமக்கு மரணம் என்பது நிச்சயமான ஒன்று. எபிரேயர் 9:27 ல் நாம் வாசிப்பது போல, மரணம் என்பது அனைவருக்கும் நியமிக்கப் பட்டிருக்கிறது. அதிலிருந்து யாரும் தப்ப முடியாது.

பிரசங்கி 12:7 ல் **இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறு படியும் போகாததற்கு முன்னும், அவரை உன் வாலிபப் பிராயத் திலே நினை''** என்று வாசிக்கிறோம். ஞானி சாலமோனும் அந்தக்

கருத்தை உறுதிப்படுத்துகிறார். ஆனால், மரணத்தை அப்படி யொரு நிகழ்வாக மட்டும் பார்க்க முடியாது. ஏனென்றால், நம்முடைய அடுத்த வாழ்வுக்கான நுழைவு வாயிலாக மரணம் இருக்கிறது. கிறிஸ்தவ மார்க்கத்தின் அடிப்படை நம்பிக்கையான நித்திய வாழ்வாகிய அடுத்த வாழ்வுக்கு மரணம் நம்மை அழைத்துச் செல்கிறது.

அப்படியானால், எந்நேரத்தில் மரணம் நேரிட்டாலும், அது எந்த காரணத்தினால் ஏற்பட்டாலும் அதைக் குறித்துதான பயமும், கவலையும் நம்மை பாதிக்காமலிருக்க, மரணத்திற்குப் பின் இருக்கும் என் நித்திய வாழ்வை எங்கு கழிக்கப்போகிறேன் என்பதில் அக்கறை செலுத்துபவர்களாக நாம் இருக்க வேண்டும். வாழப்போவது தேவனோடு என்ற சிந்தை இருப்பின் அதற்கு நுழைவு வாயிலாக இருக்கும் மரணத்தினால் உண்டாகும் அச்சம் காணாமல் போகும்.

**2. நம்முடைய வாழ்க்கை நிச்சயமில்லாத ஒன்று :**

மனிதனுடைய வாழ்நாளைக் குறித்த தேவ வார்த்தைகள் என்ன கூறுகின்றன என்பதைப் பார்க்கலாம்.

சங்கீதகாரன் 103ம் சங்கீதத்தின் 15, 16 வசனங்களில் இப்படியாகச் சொல்கிறார். மனுஷனுடைய நாட்கள் புல்லுக்கு ஒப்பாயிருக்கிறது, வெளியின் புஸ்பத்தைப் போல பூக்கிறான், காற்று அதின் மேல் வீசினவுடனே அது இல்லாமற் போயிற்று,அது இருந்த இடமும் இனி அதை அறியாது. பிரியமானவர்களே, இந்த பூமியில் நாம் வாழும் நாட்கள் நிலையற்றதாகவே இருக்கிறது.

புதிய ஏற்பாட்டில் யாக்கோபு 4:14ல் 'உங்கள் ஜீவன் எப்படி பட்டது? கொஞ்சகாலந்தோன்றி பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறதே'' என்று வாசிக்கிறோம். யோபு 14:1ல் நம்முடைய வாழ்நாள் குறுகினது என்று பார்க்கி றோம். ஆக, இந்த பூமியில் நாம் வாழ்கின்ற காலம் என்பது நிலையற்ற ஒன்றாக இருக்கிறது, நிச்சயமில்லாத ஒன்று. நமக்குச் சொந்தமானது நாம் வாழ்கின்ற வாழ்க்கை மட்டுமே!

ஒரு நாள் பிறப்பிப்பதை மனிதனால் அறிய முடியாது (நீதி. 27:1). அப்படியானால் என்ன செய்வது? என்ன செய்தால் சிறந்ததாக இருக்கும்? அன்பு சகோதர, சகோதரிகளே! நிச்சய மில்லாத வாழ்வை வாழும் நாம், எது நிச்சயம் என்றும், எது நிலை யானது என்றும் தேட வேண்டும். அத்தேடலுக்கு கிடைக்கும் ஒரே பதில் தேவன் மட்டுமே. அவரே ஆதியும் அந்தமுமாயிருக்கிறார். நிச்சயமான, நிலையான தேவனையே நாம் தெய்வமாகப் பெற்றி ருக்கிறோம். ஆக, நம்முடைய நிலையில்லாத வாழ்வில், நிலையான தேவனை அனுதினம் சேர்த்துக் கொள்வதே நமக்கு தைரியத்தையும், சமாதானதையும் தரும். மனிதனால் உண்டாகும்

தைரியமும், மனிதனால் கிடைக்கும் சமாதானம், மனிதனைப் போலவே நிலையற்றது. தேவன் கொடுப்பதோ பூரண சமாதானமும், நிலையான சமாதானமுமாம்.

எனவே, நம் அனுதின வாழ்வில், நித்தியமான தேவனை அங்கமாக்கி கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால், நிலையற்ற வாழ்வை வாழ்ந்தாலும், நிலையான, மாறாத தேவனுடைய கட்டுப் பாட்டுக்குள் இருக்கிறோம் என்ற மெய் சமாதானம் நிச்சயம் நமக்கு உண்டு.

**3. நம்முடைய நாட்கள் நியமிக்கப்பட்டிருக்கிறது.**

சங்கீதம் 139 : 16ல் **நாம் கருவிலிருந்து உருவாகும் நாட்களை தேவன் அறிந்திருக்கிறார்** என்று சங்கீதக்காரன் சொல்கிறதை நாம் வாசிக்க முடியும். பிரசங்கி 3:2 **பிறக்க ஒரு காலமுண்டு , இறக்க ஒரு கால முண்டு**' என்று சொல்வதையும் வாசிக்க முடியும்.

நம்முடைய நாட்களை தேவன் குறித்து வைத்திருக்கிறார். அந்த ஞானத்தினால் அதை அறிந்திருக்கிறார். நமக்கென்று நியமிக்ணீப்பட்ட நாளில் நமக்கு மரணம் நேரிடும். அது யாராக இருந்தாலும் சரி. யோபு 9 : 12 ல் **இதோ , அவர் பறித்துக்கொண்டு போகிறார், அவரை மறிப்பவன் யார்? நீர் என்ன செய்கிறீர் என்று அவரை கேட்பவன் யார்?** என்று வாசிக்கிறோம். நமக்கென்று நியமிக்கப்பட்ட நாளில், நாம் மரிக்கத்தான் போகிறோம். அப்படி யானால், அதை குறித்து நாம் அலட்சியமாக இருக்காமல், நம் ஆத்துமாவை காத்துக்கொள்வது எவ்வளவு அவசியம் என்ற பர்க்க வேண்டும். நாம் பெற்றுக் கொண்ட இரட்சிப்பை நிறைவேற்ற அனுதினமும் முயற்சி செய்ய வேண்டுமல்லவா? ஏனென்றால், யார் எப்பொழுது மரிப்பார்கள் என்பதை நாம் தெரிந்து கொள்ள முடியாது. உதாரணமாக, கொரோனா வைரஸினால் பாதிக்கப் பட்டு இறந்து போனவர்களில், அனைத்து வயதினரும் அடங்கி யிருக்கிறதை நாம் பார்க்கிறோம். குழந்தைகள் முதல் முதியவர் வரை, மரணம் யாருக்கானாலும் நிகழக்கூடிய ஒன்று. அதை அறிந்தவர் தேவன் மட்டுமே. எனவே, எப்பொழுதும் நாம் மரணத்தை சந்திக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். அதைக் குறித்து கவலையும் பயமும் நமக்கு இருக்கக் கூடாது. மாறாக, மரணத்திற்கு பின் எங்கே போகப் போகிறேன் என்ற கவலையும் பயமுமே இருக்க வேண்டும்.

**4. தேவனை முழுமையாய் நம்ப வேண்டும்:**

இக்கட்டான காலகட்டங்களில் தேவன் மீது நம்பிக்கை வைப்பது சற்று கடினமான விஷயம் தான். ஆனால், முடியாத காரியம் அல்ல. பேதுரு தண்ணீரின் மீது நடக்கையில் அவன் விசுவாசம் குறைந்துபோனது. அப்படியில்லாமல் தேவனை முழுமையாய் சார்ந்து வாழப்பழக வேண்டும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 16ம் அதிகாரத்தில் பவுலும், சீலாவும் சிறையிலிருந்ததை நாம் வாசித்திருப்போம். அவர்களுடைய நிலைமையும் இப்பொழுது கொள்ளை நோயின் காலத்தில் வாழ்கின்ற நம் நிலைமையும் ஒத்ததாகவே இருக்கிறது. எப்படியென்றால், அவர்கள் சிறையிலே கைதிகளாக இருந்தார்கள். அவர்களுக்கு என்ன நேரிடும் என்று அவர்களுக்கு தெரியாத நிலை. அசௌகரியமான சூழல் என்ற ஒரு நிலைமை தான் அவர்களுக்கு இருந்தது. நாமும் கிட்டத்தட்ட அந்த நிலைமையில் தான் இருக்கிறோம். ஊரடங்கு என்ற பெயரில் வீட்டிற்குள் கைதிகள் போல இருக்கிறோம். நாளை என்ன நடக்கும் என்று தெரியாத நிலை. குழப்பம், பயம், தனிமை என்று தான் நம் தற்போதைய சூழலும் இருக்கிறது.

**பவுலையும், சீலாவையும் நான் உதாரணமாக எடுத்ததற்கு காரணம் இரண்டு உள்ளது.**

**1. அவர்களுடைய சூழலும், நம் சூழலும் சற்றேறக்குறைய ஒன்றாகத்தான் இருக்கிறது.**

**2. அவர்களுடைய செயல் நமக்கு நல்ல முன்மாதிரியாக இருக்கிறது.**

ஆம், அப்படிபட்ட சூழலிலும் அவர்கள் சோர்ந்து போகாமல், (நடு ராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள். இவர்களால் அது எப்படி முடிந்தது ? தங்கள் பக்தி வாழ்வில் தவறு செய்யாத ஒரு நிலை.அப்படியிருந்தும் அடிகள், சிறை கைதிகளாக, கால்கள் தொழுமரத்தில் கட்டப்பட்டு அடுத்த நாள் என்ன தண்டனை கிடைக்கும், உண்ண உணவு கொடுப்பார்களா? தாகத்துக்கு தண்ணீர் கிடைக்குமா? என்று எதைப் பற்றியும் கவலைப்படாமல், துதித்துப் பாடி, ஜெபம் பண்ணினார்களேயானால், **எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்க கற்றுக்கொண்டேன்**'' என்று சொன்ன வார்த்தையை தங்கள் வாழ்க்கையிலும் கடைப்பிடித்திருக்கிறார்கள் என்று தானே அர்த்தம். சாவை ஆதாயமாக்கிக் கொண்ட (பிலிப்பியர் 1:21) ஒருவரால் மட்டுமே இப்படிச் செய்ய முடியும். தேவன் மீது அளவு கடந்த நம்பிக்கையும் விசுவாசமுமே அவர்களை இந்த மனநிலைக்கு கொண்டு வந்திருக்கிறது.

பிரியமானவர்களே! நமக்கும் அப்படிப்பட்ட ஒரு கண்ணோட்டம் தேவை. தேவன் அனைத்தையும் தன் கட்டுப்பாட்டுக்குள்ளாக வைத்திருக்கிறார் என்ற நம்பிக்கையும் அவர் மீது அசைக்க முடியாத விசுவாசமும், இப்படிபட்ட இக்கட்டான காலங்களைக் கடந்து செல்ல நம் ஒவ்வொரு வருக்கும் தேவைப்படுகிறது. தேவனை மையப்படுத்திய ஒரு வாழ்வில் பயமோ, கவலையோ, கண்டிப்பாக இருக்கக்கூடாது. மாறாக, இவ்வாழ்வில் பூரண சந்தோசமும், நிறைவான சமாதானமும் தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என்ற சிந்தையுமே இருக்கும். அப்படிப்பட்ட வாழ்வில் தேவன் நிச்சயம் பிரியப்படுவார். அது அவருக்கு மகிமையாகவுமிருக்கும்.

நிலையான தேவனை நிலையில்லா நம் வாழ்வில் அனுதினமும் அங்கமாக்கி சமாதானத்தோடும் சந்தோஷத்தோடும் வாழ நம் ஆயத்தமா? ✝

# பரிணாமக் கொள்கை

Bro. J.C. **சோட்**

இவ்வுலகம் எப்படி உண்டாக்கப்பட்டது? மனிதன் எங்கேயிருந்து வந்தான்? ஜீவனின் ஆதாரம் என்ன? இக்கேள்விளுக்குச் சிலர் தங்களுக்கு விடை தெரியும் என்று சொல்கிறவர்கள், அதற்கு விடையாகப் பரிணாமக் கொள்கையைச் சுட்டிக் காட்டுகிறார்கள்.

இன்றைய நவீன உலகில் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் பரிணாமக் கொள்கையை உண்மையென போதிக்கின்றன. மேலும், அருங்காட்சியகங்கள், உயிர் எப்படித் தோன்றியது, எப்படி எல்லா உயிரினங்களும் வளர்ச்சியடைந்தன போன்றவற்றை விளக்குவதற்குப் பரிணாமக் கொள்கையை எடுத்துக் கையாள்கின்றன. மேலும், அறிவியல் புத்தகங்கள் இத்தகைய யூகங்களால் நிறைந்திருக்கிறது.

முதலில் இந்தப் பரிணாமக் கொள்கை உண்மையானதா? மனிதன் தன்னைவிட கீழான ஜீவராசிகளான அமீபா, குரங்கு போன்றவைகளிலிருந்து வந்திருக்க முடியுமா? அப்படியானால், இந்த உயிரினங்கள் ஏன் அடுத்த கட்ட வளர்ச்சியை அடையவில்லை? பரிணாமக்கொள்கை உண்மையென்றால், மனிதன் தற்போதைய நிலையிலிருந்து ஏன் அடுத்த நிலைக்கு மாறவில்லை? அப்படியானால், மனிதன் உயிரினத்தின் உயரிய நிலையை அடைந்து விட்டானா? இதற்கு மேல், எந்த ஒரு நிலையும் இல்லையா? இவைகளெல்லாம், ஆழ்ந்து சிந்திக்கும்படியான மிகச் சிறந்த கேள்விகளாயிருக்கின்றன.

இங்கே காரியம் என்னவென்றால், கொள்கை என்பது சில மனிதர்களுடைய அபிப்பிராயங்கள் தான். அது உண்மை அல்ல. ஒரு கொள்கையை உண்மையென்று போதிப்பது ஏமாற்று வேலையாகும். பரிணாமக் கொள்கை உண்மையென்று போதிக்கப்படுகிறது. ஆனால், அது ஒரு போதும் நிரூபிக்கப்படவில்லை. இக்கொள்கையைப் பரப்புபவர்கள், இதில் நேர்மையோடு செயல்படுகிறார்கள். ஆயினும், இதை வேறு சில மனிதர்கள் இக்கொள்கை பொய் என்று நிராகரித்திருக்கிறார்கள்.

பரிணாமக் கொள்கை நிரூபிக்கப்பட்ட உண்மையாக இருந்தால் அது கொள்கையாயிராமல் உண்மையாயிருக்கும். உண்மை கற்றுத்தரப்பட வேண்டும். ஆனால், நிச்சயமாக இது ஒருபோதும் நிரூபிக்கப்படாது. ஆகையால், உண்மையில்லாத நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அதிகாரமுடையவராகப் பேசினார் (மத்.7:29). அவரை விமர்சித்தவர்கள் அவருடைய கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியவில்லை. இதினிமித்தம் வசனமே எப்போதும் வென்றிருக்கிறது. அதனால்தான், கிறிஸ்துவானவர் **நானே வழியும் சத்தியமும் ஜீவனுமா யிருக்கிறேன்** என்றார் (யோவான் 14:6). அவர் பேசினபோது குருடர்கள் பார்வையடைந்தார்கள், ஊமைகள் பேசினார்கள், செவிடர்கள் கேட்டார்கள், சப்பாணிகள் நடந்தார்கள், வியாதி யஸ்தர் சுகமடைந்தார்கள், மரித்துப் போனவர்கள் உயிரோடு எழுப்பப்பட்டார்கள். அவர் கடலைப் பார்த்துப் பேசினபோது கொந்தளித்த கடல் அமர்ந்தது, பிசாசுகள் ஓடின, தண்ணீர் திராட் சரசமாக மாறியது, திரளான ஜனங்கள் சாப்பிட்டுத் திருப்தியானார் கள். ஆகையால், கர்த்தருடைய வார்த்தை வல்லமையான விளைவுகளை ஏற்படுத்த ஒருபோதும் தவறியதில்லை.

பரிணாமக் கொள்கை என்பது தேவன் இருக்கிறார் என்னும் உண்மையை அழிப்பதற்கும், எல்லாம் தேவனால் உண்டாக்கப் பட்டிருக்கிறது என்னும் உண்மையை உருக்குலைப்பதற்குமான ஓர் முயற்சியாகத் தான் இருக்கிறது. ஆனால், இவ்வுலகத்தைப் பற்றி நினைக்கும் போது, நாம் எடுக்க வேண்டிய தீர்க்கமான தீர்மானம் இவ்வுலகம் தெய்வீகமாகவும், அற்புதவிதமாகவும் உண்மையில் தேவனால் உண்டாக்கப்பட்டது என்பது தான்.

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் (ஆதி.1:1) வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்து கிறது. ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது (சங்.19:1). இது தேவனைப் பற்றியும், அவருடைய சிருஷ்டிப்பைப் பற்றியும் சொல்லும் வைர வரிகளாயிருக்கின்றன. இவைகள், ஜீவனைப் பற்றியும், இவ்வுலகமும், அதிலுள்ள வைகளும் உண்டானது பற்றியும் நமக்கு விளக்கிக் காண்பிக் கின்றன. இவைகளை ஏற்றுக்கொள்வதற்கு விஞ்ஞானப் பூர்வ மற்ற பரிணாமக் கொள்கையை ஏற்றுக் கொள்வதற்குத் தேவைப்படும் அறிவை விடக் குறைந்த அளவு விசுவாசமே போதுமானதாகும்.

மேலும், ஒருவர் தனக்குத் தேவனிடத்திலுள்ள விசுவாசத்தை ஒத்துக் கொள்ளும் போது, அந்நபர் தன்னுடைய அறியமையை வெளிப்படுத்த வில்லை. மாறாக, இப்படிச் செய்வதன் மூலமாக அவர் தன்னுடைய ஞானத்தைத்தான் வெளிப்படுத்துகிறார். இவைகளையெல்லாம் வைத்துக் பார்க்கும் போது, சிருஷ்டிப்புக்கு சிருஷ்டிகர் ஒருவர் இருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வருவதே சரியானதாகும். ஆகையால், நம்முடைய விசுவாசம் சிருஷ்டிப் பின் ஆதாரங்களையும், சாட்சியங்களையும் அடிப்படையாகக் கொண்டதாக இருக்கிறது. அதே நேரத்தில் பரிணாமக் கொள்கை யை ஏற்றுக் கொண்டவர்கள், அது வெறும் கொள்கைதான், **உண்மையல்ல** என்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நாம் வெற்றுக் கொள்கையை விடுத்து, வெற்றி கொடுக்கும் தேவனின் வார்த்தைகளை விசுவாசத்தோடு ஏற்றுக்கொண்டால், வாக்குத்தத்த கீரீடத்தை மகிமையில் பெற்றுக்கொள்ள முடியும். ✝

---

## பிலிப்பியர் நிருபத்தைப் பவுல் எழுதியதற்கான நோக்கங்கள்

- ☆ அவர்கள் உபகாரத்திற்கு நன்றி சொல்லும்படி
- ☆ தன் சூழ்நிலை பற்றி அவர்களுக்குத் தெரிவிக்கும்படி
- ☆ தன் அன்பை அவர்களுக்குக் காட்டும்படி
- ☆ அவர்கள் விசுவாசத்தில் அவர்களை ஊக்கப்படுத்தும்படி
- ☆ கள்ளப்போதகர்கள் குறித்து அவர்களை எச்சரிக்கும்படி
- ☆ எயோதியாளும், சிந்திகேயாளும் கர்த்தருடைய பணியில் ஒன்றாயிருக்கும்படி

பெண்கள் பகுதி

# கிறிஸ்தவனின் அடிப்படை அவசியங்கள்

**Sis. ரேச்சல் இராஜநாயகம்**

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! ஆண்டவரும், அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே ஸ்தோத்திரங்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். தேவனுடைய மகா பெரிய இரக்கம், கிருபை, அன்பு இவைகளினால் இக்கொடிய தொற்று காலங்களை கடந்து நம்மை ஜீவனோடு வைத்திருக்கிறதை நினைத்து ஓயாமல் நன்றி சொல்லிக் கொண்டேயிருக்க வேண்டும்.

இந்த உலகம் நிலையல்ல, நம்பாதே என்ற பாடத்தை ஓரளவு மனுக்குலம் கற்றுக் கொண்டது. பணமோ, புகழோ, பட்டமோ, பதவியோ, பலமோ எதுவுமே உதவாது என்பதையும் கற்றுக் கொண்டோம். உள்ளவைகளை அவமாக்கும்படி தேவன் இல்லாதவைகளை தெரிந்து கொண்டார். ஞானிகளை வெட்கப் படுத்தும்படி தேவன் பைத்தியமானவைகளை தெரிந்து கொண்டார். பலமுள்ளவன், பலனற்றவன் யாராயிருந்தாலும் உதவிகள் செய்வது தேவனுக்கு லேசான காரியம். இப்படி இந்த நிலையற்ற உலகத்தையும், மனிதனையும் பற்றி ஏராளமாக சொல்லிக்கொண்டே போகலாம். மாற்றம் என்பது மாறாதது என்ற உண்மையும் நாம் அறிந்ததே.

அருமையானவர்களே! நம்மோடு நிலையாக, உறுதியாக இருப்பவைகள் எவைகள்? ஏன் அதை சிந்திக்கக் கூடாது? அப்படியொன்று இருக்குமானால் ஏன் அதை இறுகப் பற்றிக் கொள்ளக் கூடாது. இந்தமாதம் அந்த நிலையானவைகள் பற்றி சிறிது கற்றுத் தெரிந்து கொள்வோம் வேதத்தின் துணையோடு.

தேவன், நம்முடைய தேவன், அவர் யார்? அவருடைய வல்லமை, அதிகாரம், ஆளுமை, கோபம், அதிசயம், எரிச்சல், வெறுப்பு இவைகள் பற்றி நாம் தெரிந்துதான் வைத்திருக்கிறோம். தேவன் என்றாலே அவருடைய சொல்தான் (வார்த்தை). சொல்லும் அவரும் ஒன்று. சொல்லினாலே அண்டசாசரங்களை சிருஷ்டித்த சிருஷ்டி கர்த்தர். நிலையான, அழியாதவைகளில் பிரதானமானது தேவனுடைய சொல். அவர் பேசியவைகள் தான் பரிசுத்த வேதாகமமாக நம்முடைய கையில் இன்றைக்கு இருக்கிறது. மகாப் பெரிய பொக்கிஷம். நம்முடைய கையில் இருக்கிற மொபைல் போனின் பயன்பாடு நம்முடைய கையில்

இருக்கும் வேதாகமத்தில் இருக்கிறதா? வேத வாக்கியங்களெல்லாம் தேவனுடைய ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது என்று (I தீமோ 3:16,17) வசனங்களில் வாசிக்கின்றோம். உயிருக்கு ஆபத்து, அபாயம் என்று வரும் போதுதான் உடனடி மருந்தாக நாம் வேதத்தை கையில் எடுத்துத் தேடுகிறோம். தேவன் ஆதியிலிருந்து பேசியவைகள் தான் வேதாகமம். அது பரிசுத்தமானது. அதை கையில் எடுக்கும் போதே மனிதர்களாகிய நமக்கு பயம் வேண்டும். தேவன் நம்மோடு பேசுவதுதான் பைபிள். பழைய ஏற்பாட்டிலே தேவன் மோசேயோடு பேசும் காட்சி, விதம், இவைகளையெல்லாம் பார்க்கும் போது அது பயங்கரமானவைகளாக இருக்கிறது. தன்னால் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் தன் நடைகளை சரியாக நடத்த வேண்டும். குழம்பிப் போய் விடக்கூடாது. ஆலோசனைக்கு அலைந்து திரியக் கூடாது. தன்னை அவர்கள் எல்லா விஷயத்திலும் நோக்கிப் பார்க்க வேண்டும் என்று அனைத்தையும் சொல்லிவிட்டார். அவைகளை கட்டளைகள், கற்பனைகள், பிரமாணங்கள் என்று சொல்லுகிறோம். இவைகளையெல்லாம் சொல்லிவிட்டு, மனிதர்களே! நீங்கள் நான் சொல்லியவைகளுக்கு அப்படியே கீழ்ப்படிய வேண்டும். அப்பொழுது ஆசீர்வதிப்பேன். கீழ்ப்படியாவிட்டால் ஆசீர்வாதம் இருக்காது என்றும் திட்டமாக கூறி விட்டார். புதிய ஏற்பாட்டிலே தன் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக திருவுளம் பற்றியிருக்கிறார் (எபி 1:1,3). பிரச்சனையே என்னவென்றால், தேவன் சொன்னபடி செய்யாமல் மனிதன் தன் இஷ்டப்படி செய்வதுதான். விளைவு பல பிரச்சனைகளை சந்திப்பது. தேவவார்த்தை எளிமையாகப் புரியும்படியாக உள்ளது. ஆனால், நடப்பது என்ன? தேவ ஆலோசனைகளைப் படித்தும், தெரிந்தும், மனப்பாடம் செய்தும், வேதத்தை கையிலே வைத்துக் கொண்டும் அதைக் கேளாமலும், அதன்படி கொஞ்சமும் செய்யாமலும், தேவன் மேல் சிறிதும் பயமே இல்லாமல் சுயத்தை நம்பி, விரும்பினதை செய்து, உதட்டில் தேவனை சொல்லி விட்டு இஷ்டப்படி வாழ்ந்ததின் விளைவைத்தான் இன்று உலகம் சந்தித்து திக்குமுக்காடி, விடை தெரியாமல் முழித்துக் கொண்டுள்ளது. இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

சரி, தேவன் நாம் என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறாரோ அதை வேதாகமத்தை படிப்பதன் மூலம் தெரிந்து கொள்ளலாம். சரி, அடுத்து நாம் நம் மனதில் இனி தேவனுக்கு எப்படி பதில் சொல்வது என்று எண்ணி, தேவனிடத்தில் பேச நினைப்பது தான் ஜெபம். தேவனை நேரில் கண்டு யாரும் அவருடன் பேச முடியாது. தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை (யோவான்:1:18). ஜெபத்தின் மூலமாகத்தான்

அவருடன் பேச முடியும். அருமையான ஒரு காரியம் ஜெபம். ஆனால், இங்கு ஒரு எச்சரிக்கையும் இருக்கிறது. இதோ இரட்சிக்கக் கூடாதபடிக்கு அவருடைய குறுகிப் போகவுமில்லை; கேட்கக் கூடாதபடிக்கு, அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும், உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாத படிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது [ஏசாயா : 59:1,2]. இன்றைக்கும் இதே பிரச்சனைதான். அக்கிரமங்களும், பாவங்களையும் நாம் தொடர்ந்து செய்து கொண்டேயிருந்தோமானால் தேவனிடத்தில் யதார்த்தமாக ஜெபிக்க முடியாது. ஒரு துண்டிப்பு, அதாவது இணைப்பில் பழுது ஏற்பட்டு விடுகிறது. செய்தி போய்ச் சேர வேண்டிய இடத்திற்கு போய்ச் சேர முடியாது. இது நமக்கு நன்றாக விளங்குகிறது. பாவ மன்னிப்புக்காக தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்ற நாமும் மீண்டும் தொடர்ந்து பாவம் செய்து செய்யவேண் மானால் நம் ஜெபமும் தேவனிடம் போய் சேராது. அங்கிருந்து பதிலையும் பெற்றுக் கொள்ள முடியாது. பரிதாபமான ஒரு கிறிஸ்தவ வாழ்க்கைதான் காணப்படும்.

அருமையானவர்களே! நாம் இங்கே சிந்திக்க வேண்டும். பாவத்தோடு இருப்பவன் கிறிஸ்தவன் அல்ல. அவன் செய்யும் அனைத்துமே வீண். ஏமாந்து போவது தான் முடிவு. ஆனால் இன்று அநேகமாக வாழ்க்கைகள் இப்படித்தான் வாழப்பட்டுக் கொண்டிருக்கிறது. பாவத்தை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான் என்று வாசிக்கிறோம். மேலும், நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப் பதற்கு அவர் உண்மையும், நீதியும் உள்ளவராயிருக்கிறார் [I யோவான் 1:8,9]. பாவம் இல்லையென்றால் தான் நாம் தேவனிடம் பேசமுடியும். இல்லாவிட்டால் அந்த மாபெரும் சிலாக்கியத்தை நாம் இழந்த போவோம். நமக்கும், நம் தேவனுக்கும் இடையேயுள்ள அந்த உறவு குற்றமற்ற, மாசில்லாத, பரிசுத்தமான உண்மையுள்ள உறவாக இருக்க வேண்டும். எவ்வளவு மகத்துவமான அதிசயமான, சகல வல்லமையுடையவர் அவர். அவருடைய உறவு, அவருடைய உண்மைப் பிள்ளைகள்! அதற்கெல்லாம் கொடுத்து வைக்க வேண்டும். இந்த அருமை, பெருமை தெரியாதவர்களாக நாம் இருந்தால் நாம் என்ன கிறிஸ்தவர்கள். கற்பனைகளை கைக் கொள்வதே அவரிடத்தில் அன்பு கூருவது. வேதத்தை கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அரு வருப்பானது [ ] என்று வாசிக்கிறோம். வேத வசனங்கள்

தேவனின் வார்த்தை என்பதை உணர்ந்து, பயத்தோடும், பக்தியோடும், பரிசுத்ததோடும் வசனத்துக்கு கீழ்ப்படிவோம். அப்பொழுது தேவன் நம்மைக் கேட்பார். நாம் சமாதானமாக வாழலாம்.

அடுத்து, தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். நம்மை சிருஷ்டித்தற்காக, தேவன் நம்முடைய தகப்பனாக இருப்பதற்காக நன்றி சொல்ல வேண்டும். ஆதிமுதல் தான் படைத்த மனிதன் தன் அருகிலேயே இருக்க வேண்டும் என்று அவர் படாதபாடு பட்டும், மனிதர்களாகிய நாம் அவரை விட்டு விலகிச் செல்லவே விரும்புகிறோம். தேவனின் அன்பு, இரக்கம், கிருபை இவைகளை நமக்கு கொடுத்ததினாலே நாம் சாகமல் பிழைத் திருக்கிறோம். பூர்வ காலங்களில் பங்குபங்காகவும், வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்கு திருவுமைப்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார். தன் ஒரே குமாரனைத் மனுஷர்களுக்காக ஒப்புக் கொடுத்து, பூமிக்கு அனுப்பி பிறக்க வைத்து, வாழ வைத்து, மரிக்க வைத்து, உயிரோடு எழ வைத்து இப்படி பல காரியங்களைச் செய்து நம் இரட்சிப்பின் மேல் கவனம் வைத்த தேவாதி தேவனுக்கு நாம் எந்தளவு நன்றி செலுத்துகி றோம். பாதைக்கு வெளிச்சமாகவும், கால்களுக்கு தீபமாகவும், வாழ்க்கையின் சகல கட்டங்களுக்கும், பாவமன்னிப்புக்கும், பரலோகம் சொல்லுவதற்கும் என்று சகல ஆலோசனைகளையும் பரிசுத்த ஆவியானவர் மூலமாய் வேத வசனங்களாய் நமக்கு கையில் கொடுத்து, இப்படி சகல ஆசீர்வாதங்களையும் கொடுத்து வழிகாட்டும் தேவனுக்கு நாம் எப்படி நன்றி உள்ளவர்களாய் இருக்கிறோம். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் மூவரையும் பெற்ற நம்மை விட சிலாக்கியம் பெற்றார்கள் யார்? இந்த அருமைகளை உணர்ந்து கிறிஸ்தவ ஜீவியத்தை ஜீவிக்க முயற்சி எடுப்போம். பயமே வேண்டாம். விசுவாசத்துடன் வாழ்வோம். ஆமென்! ஆமென்!!

## *எபிரெயர் நிருபத்தில் இளைப்பாறுதல்*

1. விசுவாசிகளாக நாம் பெற்றிருக்கும் தற்போதைய இளைப்பாறுதல்.
2. படைப்பிற்குப் பிறகு தேவன் பெற்ற இளைப்பாறுதல்.
3. கானானின் இளைப்பாறுதல்
4. பரலோக இளைப்பாறுதல்

சிறுவர் பகுதி




அன்பு குட்டீஸ், எப்படி இருக்கீங்க? உங்கள் நேரத்தை நல்லமுறையில் பயன்படுத்துவீர்கள் என அக்கா நம்புகிறேன். இம்மாதம் நாம் நம்மைத் தாழ்மைப்படுத்துவது பற்றி பார்க்கப் போகிறோம்.

நாம் எல்லோரும் எப்படி வாழ வேண்டுமென்பது பற்றிப் புரிந்துகொள்ள இயேசு ஆண்டவர் பல உவமைகளைச் சொல்லியுள்ளார். அவைகளில் ஒன்று, ஜெபிக்கும்படி சென்ற பரிசேயன் மற்றும் ஆயக்காரன் பற்றியது. [லூக்கா 18:9-14]. தொடர்ந்து படிக்கும் முன் வேதாகமத்தை எடுத்து அப்பகுதியை வாசித்துவிடுவோம். சரியா ?

அன்பு குழந்தைகளே! பரிசேயன் என்பவன் வேதப் பிரமாணங்களில் தேர்ந்தவனாகவும், பக்தியுள்ளவனாகவும் காட்டிக் கொள்பவன். ஆயக்காரர்கள் பொது மக்களிடம் பலவகையான வரிகளை வசூலித்து, அக்காலத்தில் ஆட்சியில் இருந்த ரோம அரசாங்கத்துக்கு அதை செலுத்துபவர்கள். பொதுவாக, அவர்கள் பொருளாசை பிடித்தவர்களாகவும், மிகவும் மோசமானவர்களாகவும் ஜனங்களால் பார்க்கப்படுபவர்கள். நம்முடைய வேதப்பகுதியில் இந்த இரண்டு பேரும் தேவனை நோக்கி ஜெபிப்பதை நாம் பார்க்க முடியும் .

பரிசேயன் நின்று : தேவனே! நான் பரிகாரன், அநியாயக் காரன், விபச்சாரக்காரன் ஆகிய மற்ற மனுஷரைப் போலவும், இந்த ஆயக்காரனைப் போலவும் இராததினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். வாரத்தில் இரண்டு தரம் உபவாசிக்கிறேன், என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்தி வருகிறேன் என்று தனக்குள்ளே ஜெபம்பண்ணினான் [லூக்கா 18 : 11, 12]. அப்படி ஜெபித்ததன் மூலம் அந்த பரிசேயன், தன்னைத்தான் உயர்த்தி தன்னைப் புகழ்ந்ததோடு நிற்காமல், மற்றவர்களை மோசம் என்று ஏளனப்படுத்தினான். ஆனால், அந்த ஆயக்காரனோ,

தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு , தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான்'' [லூக்கா 18'13]. இந்த இரண்டு ஜெபங்களையும் கவனித்த இயேசு, 4–ல் தன்னைத் தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்று போதித்தான்.

அருமையான குட்டீஸ், உலகப் புகழ்ச்சி தற்காலிகமானது என்பதை நாம் எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும். நாம் நம் வாழ்வில் தேவனால் உயர்த்தப்படுவதற்கு நம்மை எல்லா வகையிலும் தாழ்மைப்படுத்த வேண்டும். அப்பொழுது என்றென்றும் மகிழ்ச்சி தரும் நித்திய வாழ்க்கை நமக்குப் பலனாகக் கொடுக்கப்படும்.

ஆணீவே, நாம் எல்லோருக்கும் நன்மை செய்கிறவர் களாயிருந்து, ஒரு சிறந்த முன்மாதிரியை ஏற்படுத்த வேண்டும். அத்தோடு, உண்மையான தேவன் மீது நாம் கொண்டிருக்கும் ஆழமான விசுவாசத்தை மற்றவர் அறியும் வகையில் வெளிப்படுத்த வேண்டும். நாம் எப்போதும் தாழ்மைச் சிந்தை கொண்டு பரலோகத்தின் தேவனைத் துதித்து, மகிமைப்படுத்த வேண்டும். ஆம், அவருடைய நாமத்தின் பேரில் தொடர்ந்து நன்மை செய்கிறவர்களாயிருப்போம்!!

தேவன் உங்களை ஆசீர்வதிக்கட்டும்.

**அன்புடன், உங்கள் பிரெய்ஸி அக்கா.** ✝

# *கேள்விகள்*

✎ யார் ஜெபிக்கச் சென்றார்கள்?

✎ யார் தன்னை உயர்த்தினது?

✎ யார் தன்னைத் தாழ்த்தியது?

✎ இந்த உவமையைச் சொன்னது யார்?

✎ நாம் நம்மைத் தாழ்த்தும்போது என்ன நடக்கும்?

# மனந்திரும்புதலின் அடையாளம்

Bro. **பாண்டியன்**

**ம**னந்திரும்புகின்ற ஒரே பாவியினிமித்தம் பரலோகில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கிறது என்கிற ஆண்டவரின் வார்த்தை யிலிருந்து மனந்திரும்புதலின் மேன்மையை புரிந்து கொள்கி றோம். இஸ்ரவேலர் மறுபடியும் தேவனிடம் மனந்திரும்பு வதைக்குறித்து, காணாமற்போன ஆடு, காணாமற்போன வெள்ளிக்காசு மற்றும் தகப்பனிடம் திரும்பி வந்த இளைய குமாரன் என்று கிறிஸ்துவின் உவமைகளாக லூக் 15 ல் வாசிக் கின்றோம். கொர்நேலியு இரட்சிப்பின் பேது புறஜாதியாரும் தேவ வசனத்தை ஏற்றுக் கொண்டார்கள். பிற்பாடு பவுலின் ஊழியத்தில் புறஜாதியாரும் மனந்திரும்பின செய்திய அறிவித்து சபையாருக்கு சந்தோஷத்தை உண்டாக்கினார்கள் என்று அப் 15:3 ல் காண்கிறோம். மனந்திரும்புதலுக்கு ஏற்றக் கனிகளைக் கொடுக்க வேண்டும் என்பது வேதத்தின் முக்கிய ஆலோசனையாகும். சரி, மனந்திரும்புதலுக்கான அடையாளங்கள் என்ன என்ற சில காரியங்களை இங்கு பார்க்கலாம்.

**முதலாவது,** நமக்கு உண்டாகும் பாவ மன்னிப்பின் சந்தோஷமே மனந்திரும்புதலுக்கான அடையாளமாக உள்ளது (அப் 8:39) தனக்கு ஞானஸ்நானங் கொடுத்த பிலிப்புவை தண்ணீரிலிருந்து கரையேறிய அந்த மந்திரி காணாவிட்டாலும், அவன் அதைக்குறித்து குழப்பமடையாமல் (பாவமன்னிப்பின்) சந்தோஷத்தோடே தன்வழியே போனான் என்று வாசிக்கின்றோம் கிறிஸ்துவுக்குள் வருவதற்கு முன்பாக ஒருவன் பாவத்திற்கு அடிமையாக, குற்ற உணர்வு உள்ளவனாக பரலோகத்தைக் குறித்த நிச்சயமற்றவனாக இருக்கின்றான். ஆனால், மனந் திரும்பி கிறிஸ்துவுக்குள் வரும்போது அவனுக்கு பாவமன்னிப் பின் ஆறுதல் உண்டாகி, ஒரு பெரிய பாரம் நீங்கினது போல அவன் இருதயத்தில் தெளிவும், சந்தோஷமும் உண்டாகிறது. இதுவே மனந்திரும்புதலின் அடையாளமாக உள்ளது. இதை நாம் அனைவரும் ருசி பார்த்திருக்கிறோம் என்பது உறுதி!

**இரண்டாவதாக, தேவசித்தத்திற்கு நம்மை ஒப்புக் கொடுத்தலாகும்(ரோம 12:2)** மனந்திரும்பியவர்கள் இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல், தேவனுக்கு எது பிரியம் என்பதை நாடித் தெரிந்து அதை செய்யும் போது அவர்கள் மனம் இன்னும் புதிதாகிறது என்ற நினைப்பு நமக்கு எப்போதும் இருந்து

கொண்டே இருக்கிறது. பேதுரு சொல்லும் போது, முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படி இனி நடவாமல் தேவனுக்கு கீழ்ப்படிகிற பிள்ளைகளாய் இருக்கிறீர்கள் என்கிறார் [1 பேது 1:14]. இரட்சிக்கப்பட்ட பின்பு பழைய நடக்கையை விட்டு விலகாதவர்கள் மதியற்றவர்கள் என்றும், அப்படியிராமல் கர்த்தருடைய சித்தம் ஆகக்கடவது இயேசுவே கெத்சமெனே தோட்டஜெபத்தின் போது உம்முடைய சித்தப்படியே ஆகக் கடவது என்று ஒப்புக்கொடுத்தார். நாம் பரிசுத்த மாயிருக்க வேண்டியதே தேவசித்தமாக இருப்பதால் அதற்கு நம்மை ஒப்புக்கொடுப்பதே மனந்திரும்புதலின் அடையாளமாகும்.

**மூன்றாவதாக,** நாம் சகோதரரிடத்தில் அன்பாயிருப்பது [யோவா 13:34] தேவன் அன்பாகவே இருக்கிறார். கிறிஸ்துவும் நம்மில் அன்பு கூர்ந்து நமக்காகத் தம் ஜீவனைத் தந்தார். அந்த அன்பை நாம் சகோதரரிடத்தில் பகிர்ந்து கிறிஸ்துவினிடத்தில் அதிக அன்பு கூர வேண்டும் என்பது கட்டளை [மத்தேயு 10:37] சபையானது கிறிஸ்துவின் சரீரமாக இருப்பதால் நாம் சபை மக்களிடம் அதிக அன்பு செலுத்த வேண்டும். அப்படிப்பட்ட அன்பு மற்றவரும் நம்மைப் போல இரட்சிக்கப்பட வேண்டும் என்ற விருப்பத்தை உண்டாக்கும் இது மனந்திரும்புதலின் அடையாளமாக உள்ளது.

**நான்காவதாக,** மனத்தாழ்மை என்பது மனந்திரும்புதலின் சிறந்த அடையாளமாக உள்ளது. [யாக் 4:10] தாழ்மை என்பது இயல்பாக வரும் ஒரு குணமல்ல. அதைக்கற்றுக் கொள்ள வேண்டிய அவசியத்தில் நாம் இருக்கிறோம். எனவே, தான் ஆண்டவர் நான் சாந்தமும், மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன் என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள் என அழைக்கின்றார். இந்த உலகம் ஜீவனத்தின் பெருமையைத்தான் கற்றுத்தருகிறது. இயேசுவோடே இருந்த சீஷர் தங்களில் யார் பெரியவர் என்ற எண்ணம் எழுந்த போது, ஆண்டவர் தாமே அவர்களின் கால்களைக் கழுவி அந்த எண்ணங்களை தூக்கி எறிந்தார் [யோவா 13:14] மனத்தாழ்மை மனந்திரும்பியவர்களின் அடையாளமாகும்.

**ஐந்தாவது,** கிறிஸ்துவைப்போல மாற விருப்பம் என்பது மனந்திரும்புதலின் அடையாளமாக இருக்கின்றது. இவ்வுலகில் தங்களுக்கு விருப்பமான மனிதர்களை அநேகர் பின்பற்று கின்றனர். சினிமா கதாநாயகர்களைப் போல தங்கள் சிகையலங் காரங்கள், உடைகள் இவைகளைத் தெரிவு செய்கிறார்கள். ஆனால், இரட்சிக்கப்பட்ட நம் யாவருக்கும் நமதாண்டவரே நாயகர். அவரைப் போல மாறுவதே நம் லட்சியம். அந்த விருப்பத்தை தேவனே நம்மில் உண்டாக்குகிறார் [பிலி 2:13]

இதுவே மனந்திரும்புதலின் ஒரு அடையாளமாக இருக்கிறது. கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல என்றும் , கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் மறுபடியும் கர்ப்ப வேதனைப் படுகிறேன் என்றும் பவுல் சொன்னதை நினைவு கூருவோம். கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே நம்மிலிருக்க வேண்டும். அது மாறி பாவசிந்தனை வரும்போது நம் மனம் குற்ற உணர்வால் வருத்தமடைகிறது. ஒரு கிறிஸ்தவனின் முக்கிய நோக்கமே கிறிஸ்துவின் சாயலில் வளருவது தான் (ரோம8:29).

**ஆறாவது,** கர்த்தருடைய வேதத்தின் மீது உண்டாகும் ஆவல் நம் மனந்திரும்புதலின் அடையாளமாகும். நாம் இரட்சிக்கப்படும் போது வேதத்தின் மீது ஒரு காதல் உண்டாகிறது என்ற சொன்னால் அது மிகையாகாது. அதனால் தான் பெரோயா பட்டணத்தார் தினந்தோறும் வேதவசனத்தை ஆராய்ந்து பார்த்து குணசாலிகளாயிருந்தார்கள் (அப்17:11) மனோவாஞ்சை என்ற அழகான வார்த்தையை இங்கே பார்க்கிறோம். முழுவதுமாக வேதம் பற்றியே பார்க்கிறோம். அதுவே மனமகிழ்ச்சி, ஆறுதல் ஜீவன் என்றெல்லாம் காண்கிறோம். திரளான செல்வம், பொன், வெள்ளி இவைகளை விட தேவனுடைய வேதமே மேலானது. அதினால் உண்டாகிற மகிழ்ச்சி மனந்திரும்புலின் அடையாளமாயுள்ளது.

**நிறைவாக, அந்தரங்க ஜெபத்தில் உண்டாகும் ஆனந்தம் மனந்திரும்புதலின் அடையாளமாகும்** (பிலி4:6) காணக்கூடாத தேவனை நாம் இயேசாண்டவர் மூலம் அறிந்துவிசுவாசிக்கிறோம். தம்மைத்தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறவர் என்று விசுவாசித்தால் தான் தேவனுக்கு அது பிரியமாக இருக்கும். நமக்கு பிரச்சனை, நிந்தனை, அவமானம் போன்ற காரியங்கள் ஏற்படும் போது அதை சம்பந்தபட்டவர்களிடமோ, அல்லது நமக்கு வேண்டியவர்களிடமோ உடனடியாக தெரிவிக்க அவசரப் படுகிறோம். ஆனாலும், அதினால் எந்தப்பெரிய பலனும் ஏற்படு வதில்லை. மாறாக, அந்தரங்கத்தில் பார்க்கிற நம் பிதாவிடம் தேடிச்சென்று அவைகளை நாம் பகிர்ந்து கொள்ளும்போது நம் அறிவுக்கெட்டாத வகையில் சமாதானம் உண்டாகிறதை நாம் அடிக்கடி அனுபவிக்கின்றோம் (மத்6:6) தேவனிடம் பேசும் சிலாக்கியம் கிடைத்திருப்பது ஒரு மனந்திரும்பினவர்களுக்கு உண்டாகும் அடையாளமாகும். மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுத்து தேவனுக்குப் பிரியமாக தொடர்ந்து வாழ உங்களுக்கு வாழ்த்துதல். தேவக்கிருபை நம் அனைவரோடுங் கூட இருப்பதாக ஆமென். ✝

# பக்தியுள்ள தகப்பன்

Bro. K.M. பிலிப்

**அ**ன்பான தேவ ஜனமே! யாவருக்கும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். படைப்பில் மனித இனத்தில் மட்டும் காணப்படும் ஓர் உன்னதப் பண்பு பக்தியாகும். பிள்ளைகள் பெற்றோரிடமும், மாணவர்கள் ஆசிரியரிடமும், மனைவி கணவனிடத்திலும் காட்டும் அன்பு, கீழ்ப்படிதல், கனப்படுத்துதல் (மரியாதை) இவைகள் பக்தியாகக் கருதப்படுகிறது. அதுபோலவே மனித இனம் தன்னைப் படைத்த தேவனிடத்தில் காட்டும் அன்பு, கீழ்ப்படிதல், தொழுது கொள்ளுதல் தெய்வபக்தியாகும். இதை இன்னும் தெளிவாகக் கூற வேண்டுமானால் தேவனுடைய கற்பனைகளுக்கு கூட்டாமல், குறைக்காமல், மிஞ்சி எண்ணாமல் அப்படியே கீழ்படிதலாகும். இதைத்தான் இயேசு நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக் கொள்ளுங்கள் என்றார் (யோவான் 14:15). இதைச் செய்தும் காட்டினார்; என் சித்தத்தின்படியல்ல என்னை அனுப்பின என் பிதாவின் சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன் என்று(யோவான் 6:38)பாடுகளின் மத்தியிலும், ஆகிலும் என் சித்தத்தின் படியல்ல. **உன்னுடைய சித்தப்படியே ஆகக்கடவது** என்று ஜெபித்ததின் மூலம் வெளிப்படுத்தினார் (மத். 26:39). ஆம் பிதா, என்ன விரும்புகிறாரோ, என்ன எதிர் பார்க்கிறாரோ அதை வேதத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார். அதன்படி செய்வதே பக்தி என்பதை நாமும் நம் எல்லா நிலைகளிலும் செய்து நம் பக்தியைக் காட்ட வேண்டும். அப்பொழுது நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்று குமாரனும், பக்தியுள்ளவனை கர்த்தர் தமக்காகத் தெரிந்து கொள்கிறார் என்று சங்கீதக் காரனும் நம்மை உற்சாகப்படுத்துகிறார்கள்.

பிரியமானவர்களே! உலகில் மனித இனத்திற்கு அநேக பொறுப்புகள் உண்டு. அதில் முதலாவதும், முக்கியமானதுமாக இருப்பது குடும்பப் பொறுப்பாகும். இங்கு கணவன், மனைவி, பிள்ளைகள், தாத்தா, பாட்டி என்று ஒவ்வொருவருக்கும் பொறுப்புகள் உண்டு. இதில் தகப்பனின் பொறுப்பே மிக விசேசமானதாகும். இப்பொறுப்பு கனத்த கட்டுப்பாட்டுகளுடன் கூடிய சுமையான ஒன்றாகும். இதை சுமையென்று பாராமல் பக்தியுடன் செய்யும் போது அது சுவையான ஒன்றாக மாறும். ஒரு குடும்பத்தின் பெருமை - சிறுமை உயர்வு தாழ்வு, கனம்

கனவீனம், சந்தோஷம் சஞ்சலம் எல்லாம் பெரும்பாலும் தகப்பனின் கையில் தான் இருக்கிறது. குடும்பத்தில் பிரதான செல்வாக்கும் தகப்பனுக்கே உரியதாகும். குடும்பத்தில் கணவன் மனைவியால் கனப்படுத்தப்படுகிறார்; பிள்ளைகளால் பெருமைப் படுத்தப்படுகிறார். ஞானமுள்ள மகன் தகப்பனைச் சந்தோசப் படுத்தப்படுகிறான். பிள்ளைகளின் பிள்ளைகள் முதியோருக்குக் கிரீடம் (நீ 15:20;17:6) என்பது உண்மையே. **ஆக, குடும்பத்தின் ஒட்டுமொத்த பொறுப்பும் தகப்பனையே சாரும்.** குடும்பத்தின் தலைவரே தகப்பன் தான். சபைக்குத் தலைவரான கிறிஸ்து சபையின் மீது அதிகாரத்தையல்ல; அன்பு காட்டி, சபைக்காய் தன் இரத்தத்தைத் சிந்தி, சபையை போஷித்து நேர்த்தியாய் வளர்த்து வருகிறார் (எபே. 5:23-29). கிறிஸ்து நம் தவறுக்கெல்லாம் தண்டித்திருந்தால் நாம் எம்மாத்திரம்? ஒரு தகப்பன் பிள்ளைகளை வளர்ப்பதில், **பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக** என்ற (எபே. 6:4). வேத ஆலோசனைப்படி இருக்க வேண்டும். கண்டிப்பு என்பது குழம்பில் உப்பு சேர்ப்பது போல் அளவுடன் இருந்தால் தான் ருசிக்கும். பிள்ளைகளின் மனதில் என் தகப்பன் பக்தியுள்ளவர், பரிசுத்தர், அன்புள்ளவர், பொறுப்புள்ளவர் என்ற உயர்ந்த ஸ்தானம் உருவாகியிருக்க வேண்டும். தகப்பனின் தவறான செயல் பிள்ளைகளின் மனதில் மறையாத வடுக்களை ஏற்படுத்தி விடக்கூடாது.

சில வரலாற்றை கவனியுங்கள்: யோயாக்கீ ராஜா தன் தகப்பன் செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதைச் செய்தான். இவன் ஆட்சி செய்தது மூன்று மாதம் தான் (11:6,24-9). தன் தகப்பனாகிய மனாசே செய்தது போல் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதைச் செய்தான். இவன் இரண்டு வருடங்கள் ஆட்சி செய்தான். அதே சமயம் யோசியா கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதைச் செய்து தன் தகப்பனாகிய தாவீதின் வழியிலெல்லாம், வலது இடது புறம் விலாகமல் நடந்தான். இவன் 8 வயதில் ராஜாவாகி 31 வருடம் ஆட்சி செய்தான். இப்படியே தகப்பன் வழியில் நடந்து செம்மையானதைச் செய்த எசேக்கியா ராஜா 29 வருடம் ஆட்சி செய்தான் (11:22:12;18:3) என்று பார்க்கிறோம். ஆம், பிள்ளைகளிடையே தகப்பனின் தாக்கம் தவிர்க்க முடியாத ஒன்று என்பதை மறந்து விடாதீர்கள். பிள்ளைகளின் ஆசீர்வாதமும், சாபமும் தகப்பனின் நடத்தையிலிருக்கிறது.

பிரியமானவர்களே! பக்தியுள்ள தகப்பன் பிள்ளைகளுக்கு தேவனை அறிமுகப்படுத்தும் வாய்ப்பை பெற்றுள்ளார். தேவனுக்கு முதலிடம் கொடுத்து நல்வழி காட்டி அமைகிறார். இந்த இன்றியமையாத பண்புள்ள தகப்பன் தாவீதின் வம்சத்தானும், அன்னாளின் கணவரும், தீர்க்க தரிசிகளில் ஒருவரான சாமுவேலின் தகப்பனுமான எல்க்கானா (I சாமு 1,2 அதிகாரங்கள்). எல்க்கானா தனிப்பட்ட வாழ்க்கையில் சிறந்த பக்தியுள்ள மனிதனாக வாழ்ந்தான். அந்த மனுஷன் சீலோவிலே சேனைகளின் கர்த்தரைப் பணிந்து கொள்ளவும், பலியிடவும் வருஷந்தோறும் தன் ஊரிலிருந்து போய் வருவான் என்ற வரலாறு எல்கானாவின் பக்தி வைராக்கியத்தை சுட்டிக் காட்டுகிறது. (I சா1:3,21).

வருஷந்தோறும் என்பதில் ஒரு ஒழுங்கு, உறுதி தெரிகிறது. தேவ பக்தியுள்ளவர்களிடத்தில் ஆராதனைக்குரிய காரியத்தில் ஒழுங்கு, உறுதி மிக அவசியம். சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது என்ற (1 கொரி 14:40) பவுல் சபை நிகழ்வுகளுக்கு வழிமுறை வகுத்துள்ளார். உற்சாகம் என்ற பெயரில் வெறும் கூச்சலும், ஆட்டமும், பாட்டும் பக்தியுள்ள, தேவன் விரும்பும் ஆராதனையாகாது. இது அஞ்ஞானிகளின் வழிபாடாகும். இதை உலகம் அங்கீகரிக்கும். ஆனால், வேதம் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளாது. அன்றும், இன்றும், என்றும் உபா 4:2; நீதி 30:6, பிர 3:14 – வெளி 22:18,19 வேதம் தெளிவாய், திட்டமாய் போதித்துள்ளது. ஆராதிப்பதில் ஒழுங்கில்லாத இடத்தில் பக்தியை எதிர்பார்க்க முடியுமா?

பக்திமான்களே! ஆராதனைக்குத் தடையாக தூரமோ, நேரமோ, குடும்பமோ, உறவுகளோ தடையாயிருக்க அவமதிக்கக் கூடாது. கர்த்தருக்குப் பயப்படுகிறவனுக்குத் திடநம்பிக்கை உண்டு. (நீ 14:26). இப்படிதான் பக்தியுள்ளவன் என்று தன்னளவில் திருப்தியடையாமல் எல்க்கானா குடும்பம் முழுவது மாக பக்தியில் நடத்திய பக்தியுள்ள தகப்பனாயிருந்தான்.

I எல்க்கான குடும்பத்தோடு ஆராதிக்கிற ஒரு தகப்பன்: இன்றைய நாளில் அநேகர் தனிப்பட்ட முறையில் ஜெபிப்பது, சபை கூடுவது, நற்செய்தி கூட்டங்களில் கலந்து கொள்வது போதும் என்று எண்ணுகிறார்கள். எப்படி ஒரு குடும்பமாக ஒரே வீட்டில் குடியிருக்கிறோம், சாப்பிடுகிறோம். பிற காரியங்களை பகிர்ந்து கொள்கிறோமோ அப்படியே ஆவிக்குரிய, பக்திக்குரிய

காரியங்களிலும் இருக்கவேண்டாமா? எல்க்கான பலியிட தன் மனைவி, பிள்ளைகளோடு புறப்பட்டு சென்றான். பிள்ளைகளோடு உணவை பகிர்ந்து கொண்டான். அங்கே சில நாட்கள் தங்கினான். போகவர வெகுதூரப் பயணத்தை பிள்ளைகளோடு கழித்தான். எவ்வளவு சந்தோசம்! இதைத்தான் புதிய ஏற்பாட்டின் கொர் நெலியு (அப் 10:2). சிறைக்காவலன் (16:34). குடும்பத்தோடு தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருந்தார்கள் என்று ஆவியானவர் சுட்டிக்காட்டுகிறார். இன்று அநேகப் தகப்பன்மார்கள் பிள்ளைகளுக்கு தன் நேரத்தைக் கொடுக்காமல், ஒரு கட்டத்தில் பிள்ளைகளின் அன்பை, ஐக்கியத்தை உறவை இழந்து நிற்கிறார்கள். எல்க்கான தனக்குக் கிடைத்த எல்லா வாய்ப்புகளையும் அனுகூலமாக்கி பிள்ளைகளை பக்தியில் வளர்த்தான். 2 மனைவி 10 ஆண் பிள்ளைகள், சில பெண் பிள்ளைகள் இருந்தும் கடமையை சரியாய் செய்து எல்லோரையும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது தான் எல்க்கானாவில் பக்தியின் பலன். குடும்பத்தோடு ஆராதித்ததில் எல்க்கானா, திட்ட மிட்டு, சரியான நாளில், சரியான நேரத்தில், சரியான இடத்தில் பலி செலுத்தினான். இதை முழுமையாய் செயல்படுத்தினான். இது உண்மையான பக்தியின் செயல்பாடு. அன்பானவர்களே, சபை கூடிவருவதில் நம் திட்டம், ஆயத்தம், செயல்பாடு எப்படி யிருக்கிறது? முழுகுடும்பத்தோடு ஆராதிக்கிறோமா? தயவு செய்து சபை கூடிவருதலில் எவ்வித சுணக்கமும் இன்றி குடும்பமாக கலந்து தேவனை மகிமைப்படுத்துவோம்.

தயவு செய்து சபை கூடிவருதலில் எவ்வித சுணக்கமும் இன்றி குடும்பமாக கலந்து தேவனை மகிமைப்படுத்துவோம். மொத்தத்தில் எல்க்கான அன்பின் அரவணைப்பில் பிள்ளைகளை அணைத்துக் கொண்டான். தேவாலயத்திற்கு உடன்கூட்டிக் செல்வது, எல்லோரோடும் சேர்ந்து பலி செலுத்துவது போன்ற பக்திக்குரிய காரியத்தில் ஆவிக்குரிய தகப்பனாய் திகழ்ந்தான். நிச்சயம் பிள்ளைகள் எல்க்கானாவை ஒரு பக்தியுள்ள தகப்பனாக அனுபவித்திருப்பார்கள். அன்பானவர்களே! நம் பிள்ளைகளுக்கு இம்மைக்குரிய படிப்பு, பட்டம், பதவி, வீடு, சொத்து, திருமணம் என்று எவ்வளவோ நன்மைகள் செய்து வருகிறோம். அதே சமயம் சரீர முயற்சி அற்ப பிரயோசனமுள்ளது; தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும், இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத் தத்தமுள்ள தாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது (I தீமோ 4:8). ஆகவே, ஒவ்வொரு தகப்பனும் பிள்ளைகளைப் பக்திக் குரியவர்களாக வளர்ப்போம். உலகில் நம் பிள்ளைகள் பொல்லாங் கனை ஜெயித்து ஜெயங்கொண்டு கிறிஸ்துவோடு சிங்கா சனத்தில் உட்காரும் வாய்ப்பை பெற்றுத் தரும் பக்தியுள்ள தகப்பனாய் வாழ்வோம். ஆமென்!!! ✝

# பிராதன கட்டளை - யாருக்குக் கொடுக்கப்பட்டது?

Bill Keele

சபையில் சிலர் பிராதனை கட்டளை இன்று வாழும் நமக்குக் கொடுக்கப்படவில்லை என்று நினைப்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது! அவர்களுடைய எண்ணம், இயேசு கிறிஸ்து பதினொரு சீஷர்களிடம் பேசிய உண்மைகளை அடிப்படையாகக் கொண்டது (மத்தேயு 28:10). இன்றும் சபையில் சிலர், பிரதான கட்டளை தலைமைத்துவ பொறுப்புகளில் இருப்பவர்களுக்கு மட்டும் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறார்கள். அவர்களுடைய எண்ணம் ஆரம்பத்தில் பிரதான கட்டளை சபையின் தலைமைத் துவத்தை அடையாளப்படுத்தியது பதினொரு சீஷர்கள் தான் என்கிற உண்மையை ஆதாரமாக்கிக் கொண்டது தான். இவ்வகையான அணுகுமுறை வெளிநாடு சென்று ஊழியம் செய்பவர்கள் மற்றும் பிராந்திய சபையில் ஆத்தும ஆதாயம் செய்பவர்களுக்கு உதவ ஊக்கமளிக்கும்.

இன்னும் சபையில் சிலர் பிரதான கட்டளை எல்லோருக்கு மானது தான். ஆனால், இது முன் மாதிரியான வாழ்க்கை மூலமாக நிறைவேற்றப்படுகிறது என்று நம்புகிறார்கள். இந்தக் கண்ணோட்டத்தில் வைத்துப் பார்த்தால், முன்மாதிரியான வாழ்க்கை முறையைத் தாண்டி ஆத்தும ஆதாயத்தில் கிறிஸ்தவர்கள் ஈடுபட வேண்டிய அவசியமில்லை என்கிற நிலை ஏற்பட்டுவிடுகிறது. யாராவது ஒருவர் அதிகமாகச் செய்ய விரும்பினால், அது அவரவர் விருப்பத்திற்கு உட்பட்டது தான், அது கட்டாயமல்ல என்கிற நிலை ஏற்பட்டுவிடுகிறது. இவ்வகையான அணுகுமுறை ஆத்தும ஆதாய செயல்பாடுகளை ஊக்கப்படுத்தினாலும் கூட முன் மாதிரியான ஜீவியத்திற்குத்தான் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது.

இன்றும் சபையில் சிலர் பிரதான கட்டளை சபைக்கு தான் கொடுக்கப்பட்டது சபை ஆத்தும ஆதாயப் பணியில் முழுமையாக ஈடுபட வேண்டும் என்று நினைக்கிறார்கள். இது சபையில் சிலர் ஆத்தும ஆதாயத்தில் ஈடுபடும் போது எல்லா அங்கத்தினர் களிடமும் நல் மனசாட்சியைக் கொண்டிருக்கவேண்டுமென்று ஒரு ஆவலைத் தூண்டுகிறது.

இன்றும் சபையில் சிலர் பிராதன கட்டளை சபையில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு அங்கத்தினருக்குத் தான் என்று நினைக்கிறார்கள். அதாவது சபையிலுள்ள ஒவ்வொருவரும்

ஆத்தும ஆதாயத்தில் ஈடுபாட்டால் நானும் கடமைப் பட்டிருக்கிறேன் என்ற எண்ணம். வேறு விதமாகச் சொன்னால் பிரசங்கியாரும் மூப்பரும், ஆத்தமாக்களை ஆயத்தப்படுத்த வில்லையென்றால், நானும் ஆயத்தப்படுத்தமாட்டேன் என்னும் நிலைப்பாடு. இவ்விதமாக பிரசங்கியார் மூப்பர்களை குற்றஞ் சாட்டுகிறார். மூப்பர்கள் பிரசங்கி யாரை குற்றஞ்சாட்டுகிறார். சபையில் பொறுப்புகளில் இருப்பவர்கள் அங்கத்தினர்களைக் குற்றஞ்சாட்டுகிறார்கள். அங்கத்தினர் பொறுப்புகளில் இருப்பவர்களை குற்றஞ்சாட்டுகிறார்கள் இதினிமித்தம் யாருமே பொறுப்புகளை ஏற்பதில்லை.

இன்றும் சபையில் சிலர் பிரதான கட்டளை சபையில் அங்கம் வகிக்கும் எல்லா அங்கத்தினர்களும் ஆத்தும ஆதாயத்தில் ஈடுபடாவிட்டாலும் கூட நான் ஆத்துமாக்களை ஆதாயம் செய்வேன். இது ஓர் ஆக்கப்பூர்வமான அணுகுமுறையாகும். இப்படி நினைப்பவர்கள் ஆத்தும ஆதாயப் பணியில் சபை ஒட்டுமொத்தமாக ஈடுபட வேண்டுமென்று நினைக்கிறார்கள். இது இவர்களுடைய தனிப்பட்ட பொறுப்பிலிருந்து இவர்களை விடுக்கவில்லை. சபையில் யார் ஆத்தும ஆதாயம் செய்தாலும் செய்யாவிட்டாலும் நான் செய்வேன் என்னும் எண்ணம் கொண்டிருப்பவர்கள் தங்களுக்கு வேறுசில பொறுப்புகள் இருப்பதை உணர்த்தியிருக்கிறார்கள். இருந்த போதிலும் அவர்களுடைய ஆத்தும ஆதாய ஆர்வம் அவர்களை விட்டு அகன்று போகவில்லை.

சகோதரனே, சகோதரியே.......நாம் எங்கே இருக்கிறோம்..? ✝

## நாளும் - நடப்பும்

- ☆ ரேஷன் கடையில் மே மாதம் பொருட்களை பெறுவதற்கு, வீடு வீடாக டோக்கன் வழங்க முடிவு.
- ☆ மாவட்டங்களுக்கு உள்ளேயும் மாவட்டங்களுக்கு வெளியேயும் செல்ல தடை
- ☆ தனியார் மருத்துவமனை ரெம்டெசிவிர் பெற ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.
- ☆ தமிழகத்தில் பெரும் தொற்று பாதிப்பார். ஒரே நாளில் 311 பேர் உயிரிழப்பு
- ☆ நீட், ஜேஇஇ நுழைவுத்தேர்வு – விரைவில் முடிவு.